தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹ 10/- மலர் 16 இதழ் 04 ஆகஸ்ட் 2014 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

என் தாய்நாட்டை நான் உளமார நேசிக்கிறேன்

68வது சுதந்திர தினக் கொண்டாட்டம்...

திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

சிறு கிராமம் முதல் பெரும் நகரம் வரை அனைத்துத் துறைகளிலும் இன்று பெண்கள் தங்களின் ஆளுமையை செலுத்தி வருகின்றனர். இவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக பல காரணங்கள் இருப்பினும் அவைகளில் முதலிடம் பெற்றது மகளிர் திட்டம் தான் என்பதை அனைவரும் அறிவார்கள். சுய உதவிக் குழுக்களின் உறுப்பினரான உங்களை மாதந்தோறும் முற்றம் வாயிலாக சந்திக்கும் போது எனக்கு பெருமகிழ்ச்சி உண்டாகிறது.

இன்று நீங்கள் பெற்றுள்ள வெற்றி சாதாரணமானது அல்ல. பல்வேறு தடைகளையும், ஏளனங்களையும் முறியடித்த நீங்கள் சாதனையாளர்கள்தான் என்பதை சொல்லிக் கொள்வதில் எனக்கு என்றுமே மகிழ்ச்சிதான். உங்களின் முன்னேற்றம் அனைத்துத் துறைகளிலும் தொடர வேண்டும் என்பதை எனது வாழ்த்தாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று பெண்கள் சாதனையாளர்களாக இருந்தாலும், அவர்கள் பல இடங்களிலும் சோதனைகளை எதிர்கொள்கின்றனர் என்பதுதான் தற்போதைய வேதனையான நிகழ்வாகும். சிறு பெண் குழந்தைகள் மட்டுமல்ல நடுத்தர வயதைத் தாண்டிய பெண்கள் கூட பாலியல் தாக்குதலுக்கு ஆளாகின்றனர். கல்வி நிலையங்கள் முதல் பெரும் நிறுவனங்கள் வரை பெண்கள் பாரபட்சமாக நடத்தப்படும் நிலை உள்ளது.

ஏன் இந்த ஏற்றத்தாழ்வு? மக்கள் தொகையில் சரிபாதியாக உள்ள பெண்களின் வளர்ச்சியைத் தடுப்பது யார்? பெண்களுக்கு எதிரான சக்திகள் எவை? என்ற கேள்விகளுக்கு பல்வேறு பதில்கள் இருந்தாலும், அவை அனைத்தையும் விட பெரும்பாலான பெண்கள் கல்வியறிவற்றவர்களாக இருப்பதுதான் என்ற பதில்தான் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையை மாற்ற நீங்கள் முன் வர வேண்டும். ஆண்களுக்கு அளிக்கப்படும் கல்வியில் சிறிதும் குறைவின்றிப் பெண்களும் பெற வேண்டும். கல்வியறிவு மட்டுமே பெண்களின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் வழி வகுக்கும். ‘கல்வியில்லாத பெண்கள் களர் நிலம், அந்நிலத்தில் புல் விளைந்திடலாம். நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை’ என்ற பாவேந்தரின் வார்த்தை பெண் கல்வியறிவு பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

கல்வியறிவு பெற்ற பெண்களே நல்ல குடும்பத்தை, சமுதாயத்தை, நாட்டை உருவாக்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு சுய உதவிக் குழுக்களின் மகளிர் அனைவரும் பெண் கல்விக்கு முக்கியத்துவம் தரும் செயல்களில் ஈடுபட வேண்டும். நீங்கள் நினைத்தால் எதையும் சாதிப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதை மற்றவர்களும் அறிந்து கொள்ள வேண்டும். அதற்கான செயல்களில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். எனவே இன்றே நீங்கள் கல்விப் பணியில் ஈடுபடுங்கள். நீங்கள் ஏற்றி வைக்கும் இந்த ஒளி பெண்களைச் சூழ்ந்துள்ள கல்லாமை என்ற இருட்டை போக்கட்டும். பெண்களின் நலனைக் காக்கும் கருவியாகட்டும்.

மேலாண்மை இயக்குநர்

கல்வியறிவு பெற்ற பெண்களே நல்ல குடும்பத்தை, சமுதாயத்தை, நாட்டை உருவாக்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு சுய உதவிக் குழுக்களின் மகளிர் அனைவரும் பெண் கல்விக்கு முக்கியத்துவம் தரும் செயல்களில் ஈடுபட வேண்டும். நீங்கள் நினைத்தால் எதையும் சாதிப்பீர்கள்

உள்ளே...



10 முயல் வேட்டை

வரலாற்றுப் புகழ் பெற்ற செஞ்சிக் கோட்டை	4
பெண்களைக் காக்கும் சட்டங்கள்	8
தமிழகத்தில் ஒரு சுகாதாரப் புரட்சி	13
மணியக்கா	16
சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்	22
மதிப்பூட்டிய பால் பொருட்கள்	30
பெண்களும் எரிசக்தி சேமிப்பும்	32

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்கும் வண்ணம் அவர்களின் வெற்றிக் கதைகளை மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றம் இதழ் என்னைப் போன்ற சுய உதவிக் குழு மகளிருக்கு நல்ல தோழியாக உள்ளது.

மீனாட்சி ராமச்சந்திரன்,
ரோஜா மகளிர் சுய உதவிக் குழு,
சோளிங்கர், வேலூர் மாவட்டம்

புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் போன்றவற்றின் மூலம் வாழ்வில் வளம் பெற்று வரும் கிராமப்புற ஏழை எளிய மக்களின் வெற்றிக் கதைகளும், புதுவாழ்வு திட்டம் குறித்த செய்திகளும் எங்களுக்கு பல்வேறு வகையிலும் ஊக்கமளிப்பதாக உள்ளது. இதற்காக முற்றத்திற்கு எங்களின் நன்றி.

ரஞ்சனி சேகர்,
தங்கம் மகளிர் சுய உதவிக் குழு,
மேட்டுத் தெரு, சேலம் மாவட்டம்.

பல்வேறு செய்திகளையும், மகளிர் குழுக்களின் செயல்பாடுகளையும், பயனுள்ள பல குறிப்புகளையும் தாங்கி வரும் முற்றம் இதழை எங்கள் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் படிக்கின்றனர். மேலும் பல தகவல்களுடன் முற்றம் இதழ் வெளிவர வாழ்த்துக்கள்.

விஜயலட்சுமி கார்த்திக்,
மாரியம்மன் மகளிர் குழு,
திருத்தவெளி, காஞ்சிபுரம் மாவட்டம்.

சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதார செயல்பாடுகள், வெற்றி பெற்றவர்களின் கதைகள் என அனைத்தும் சிறப்பாக முற்றம் இதழில் இடம் பெற்றுள்ளது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

வசந்தி கிருஷ்ணமூர்த்தி,
விண்மீன் மகளிர் சுய உதவிக் குழு,
திருவொற்றியூர், திருவள்ளூர் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 16 இதழ் 04 ஆகஸ்ட் 2014

விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்
மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்
எம். மாதவி
கூடுதல் இயக்குநர்
எல். ராஜா
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
கா. சுஜாதா ஜேக்கப்
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
ப. கலைமதி
மக்கள் தொடர்பு அலுவலர்

முற்றம் உதவியாளர்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

தொலைபேசி: 044-2817 3412 / 3413
தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

நீங்களும் இறைவனாகலாம்...

மனிதர்களின் அறிவுக் கூடத்தை திறப்பதற்காகப் பயன்படுத்தப்படும் திறவு கோலாக 'எழுத்தறிவை' எடுத்துக் கொள்ளலாம். ஒரு குழந்தை பிறந்து படிப்படியாக வளர்ந்து வரும் அதே வேளையில் அக்குழந்தையின் அறிவும் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு படிப்படியாக வளர்ந்து வருகிறது. இந்த அறிவு வளர்ச்சியின் முதல்படி எழுத்தறிவு ஆகும். இக்காரணத்தினால்தான் 'எழுத்தறிவித்தன் இறைவன் ஆவான்' என்ற பொன்மொழியை நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

ஒரு நாட்டின் வளர்ச்சியானது, அந்நாட்டு மக்கள் வாழும் நலவாழ்வைக் கொண்டே அளவிடப்படுகின்றது. மக்களின் நலவாழ்வை அளவிடும் போது, 'எழுத்தறிவு' ஒரு முக்கிய எடுத்துக் காட்டாக விளங்குகிறது. எனவே எழுத்தறிவு அனைத்து மனிதருக்கும் எவ்வளவு முக்கியம் என்பது புலப்படுகிறது. 'கண் இருந்தும் குருடர்களாய் இருப்பது' என்ற வழக்கு எழுத்தறிவற்றவர்களுக்கு மிக சரியாகப் பொருந்தும். எனவேதான் எழுத்தறிவின் முக்கியத்துவத்தை உணர்த்த உலகளவில் 'எழுத்தறிவு நாள்' அனுசரிக்கப்பட்டு வருகிறது.

எழுத்தறிவைக் கொடுக்கும் பொறுப்பை ஆசிரியர்கள் மேற்கொண்டுள்ளனர். கற்பித்தல் என்பது பணி அல்ல. மாறாக அது ஒரு சமூகத் தொண்டு என்பதை முதலில் ஆசிரியர்கள் உணர வேண்டும். இத்தொண்டிற்கு களங்கம் கற்பிப்பவர்கள் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் துரோகம் செய்பவர்களே என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. 'வறுமை, ஏழ்மை மற்றும் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கல்வியறிவைக் கொடுக்கும் நல்ல ஆசிரியராக நான் இருக்கின்றேன்' என்ற மனநிறைவோடு ஒவ்வொரு ஆசிரியரும் ஆசிரியர் தினத்தைக் கொண்டாட வேண்டும். ஆசிரியர் தினம் ஒரு விழாவாக மட்டும் இருந்து விடக் கூடாது.

ஒரு பெண்ணுக்கு கல்வியைக் கொடுத்தால் ஒரு சமுதாயமே பயன் பெறும் என்பதே உண்மை. ஆனால் எழுத்தறிவற்றவர்களில் பெண்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது. பெண் குழந்தைகள் தினத்தை அனுசரிக்கும் இந்த மாதத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் சவால்களில் ஒன்றாக இருப்பது அனைத்து பெண்களுக்கும் எழுத்தறிவு கிடைக்கச் செய்வதாகும்.

மகளிர் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் எழுத்தறிவு பெற்றவர் களாக மாற்றப்பட வேண்டும். இப்பணியை, குழுக்களில் உள்ள படித்த உறுப்பினர்கள் மேற்கொண்டு ஒவ்வொருவரும் எழுத்தறிவற்றவர்களுக்கு கற்பிக்க வேண்டும். இப்படி செய்தால் நீங்களும் இறைவன் ஆகலாம். எழுத்தறிவிப்பது மிகப் பெரிய சமூகத் தொண்டாகும். இந்த தொண்டின் மகத்துவத்தை சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அவர் கூறுகிறார் "நீங்கள் சொர்க்கத்தை அடைய வேண்டும் எனில், நாட்டின் பட்டித்தொட்டிகளுக்கெல்லாம் சென்று ஏழை எளிய பாமர மக்களுக்கு கல்வி கற்பியுங்கள்".

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வென்ற தமிழக வீரர் - வீராங்கனைகளுக்கு

தலா ரூ. 50 இலட்சம் பரிசு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்!

ஸ்காட்லாந்து நாட்டின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற 20வது காமென்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தமிழக வீரர், வீராங்கனைகள் தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர். பளு தூக்குதல் போட்டியில் தமிழகத்தின் வேலூரைச் சேர்ந்த சதீஷ், ஸ்குவாஷ் இரட்டையர் பிரிவில் தமிழக வீராங்கனைகள் தீபிகா பலிக்கல், ஜோஷ்னா சின்னப்பா ஆகியோர் தங்கம் வென்றுள்ளனர். அதேபோல் டேபிள் டென்னிஸ் இரட்டையர் போட்டியில் தமிழக வீரர்கள் சரத் கமல், அந்தோணி அமல்ராஜ் ஆகியோர் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளனர். காமன்வெல்த் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகளுக்குப் பாராட்டு தெரிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தங்கப் பதக்கம் வென்றவர்களுக்கு தலா ரூ. 50 இலட்சமும், வெள்ளிப்பதக்கம் வென்றவர்களுக்கு தலா ரூ. 30 இலட்சமும் பரிசாக வழங்கியுள்ளார்கள். ■

பெண்கள் மற்றும் குழந்தைகள் பிரச்சனை குறித்து ஆலோசிக்க ஊராட்சிகளில் மகளிர் சபைக் கூட்டங்கள்!

தமிழ்நாட்டில் சமீப காலமாக பெண்கள் மற்றும் குழந்தைகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகும் சம்பவம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக கிராமப்புறங்களில் பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. இதைத் தடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒருபகுதியாக, ஊராட்சிகளில் கிராம சபைக் கூட்டம் நடத்துவது போல், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்து விவாதித்து, தீர்வு காண அனைத்து கிராம ஊராட்சிகளிலும் மகளிர் சபைக் கூட்டங்களை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது.

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அதிகாரம் அளித்தல், பெண்களின் கல்வி, அங்கன்வாடி மையங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், குழந்தைகள் பாலின விகிதம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டங்கள் உள்ளிட்டவை குறித்து விவாதித்து, தீர்வு காண வசதியாக இந்த மகளிர் சபைக் கூட்டம் நடத்தப்படுகிறது. ஊராட்சி மன்றத் தலைவரின் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் மகளிர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். முதற்கட்டமாக சோதனை அடிப்படையில் கடந்த ஜனவரி மாதம் 12ஆம் தேதி ஒரு சில கிராம ஊராட்சிகளில் அனைத்து அரசுத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் ஊரகப் பகுதி மகளிர் பங்கேற்புடன் கூட்டம் நடத்தப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அதே மாதம் 22ஆம் தேதி அன்று நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டது. கிராமப்புற பெண்களிடையே மகளிர் சபைக் கூட்டம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதால், ஆண்டுதோறும் மகளிர் சபைக் கூட்டங்களை நடத்த அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி, ஆண்டுதோறும் கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படும் 15 நாட்களுக்கு முன் இந்த மகளிர் சபைக் கூட்டங்களை நடத்தி, கிராம சபைக் கூட்டத்தின் போது பிரச்சனைக்குத் தீர்வு காண அரசு முடிவு செய்துள்ளது. ■

டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த தினம்-செப்டம்பர் 5

மாதா பிதா குரு தெய்வம்...

நம் நாட்டின் வளமான எதிர்காலம் மாணவர்கள் கையில்தான் உள்ளது. அந்த மாணவர்களிடம் புதைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணர்ந்து, அவர்களின் அறிவுக் கண்களை திறந்து சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பயன்படும் வகையில் மாணவர்களை உருவாக்கும் மகத்தான சேவையினை புரிந்து வருவது ஆசிரியர் சமுதாயமாகும். அந்த ஆசிரியர் சமுதாயத்தின் தன்னல மற்ற சேவையினைப் போற்றி பெருமைப்படுத்தும் வண்ணம் ஆண்டுதோறும் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5ஆம் தேதி ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. ■

இந்தியாவில் உள்ள சிறந்த கோட்டைகளுள் நமது செஞ்சிக் கோட்டையும் ஒன்றாகும்.

வரலாற்றுப் புகழ் பெற்ற செஞ்சிக்கோட்டை

இயற்கையாக அருகருகே அமைந்த மூன்று பெரிய மலைகள், இரண்டு சிறிய குன்றுகள், அவற்றை இணைக்கும் 12 கிலோ மீட்டர் பிரம்மாண்ட மதில் சுவர்கள் ஆகியவற்றைக் கொண்ட இந்த கற்கோட்டை 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அதன் அமைப்பு மற்றும் வலிமை காரணமாக பல்வேறு போர்களை சந்தித்தது.

தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள முக்கியமான சுற்றுலாத் தலம் செஞ்சிக் கோட்டை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த கோட்டை, நமது பழங்கால பொக்கிஷங்களில் ஒன்றாக இன்றளவும் திகழ்ந்து வருகிறது.

தமிழக வரலாற்றில் செஞ்சிக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. கோட்டைகள் எல்லாம் கட்டுவதற்கு முன்னரே கோட்டையுடன் வலிமையாகத் திகழ்ந்தது செஞ்சி. மராட்டிய மன்னரான சிவாஜி 'இது இந்தியாவில் எவரும் உட்புக முடியாத கோட்டைகளுள் சிறந்தது' எனக் கூறுமளவிற்கு அரண் செய்யப்பட்ட கோட்டையாக இருந்தது. ஆங்கிலேயர் இதனை 'கிழக்கின் ட்ரோய்' என்றனர். முகலாயர்களால் பாதுஷாபாத் என்றும், சோழர்களால் சிங்கபுர நாடு என்றும் செஞ்சிக்கோட்டை அழைக்கப்பட்டது.

இயற்கையாக அருகருகே அமைந்த மூன்று பெரிய மலைகள், இரண்டு சிறிய குன்றுகள், அவற்றை இணைக்கும் 12 கிலோ மீட்டர் பிரம்மாண்ட மதில் சுவர்கள் ஆகியவற்றைக் கொண்ட இந்த கற்கோட்டை 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அதன் அமைப்பு மற்றும் வலிமை காரணமாக பல்வேறு போர்களை சந்தித்தது. பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள், மராட்டியர்கள், முகலாயர்கள் என பல்வேறு ஆட்சியாளர்களின் கேந்திரமாக விளங்கியது.

இந்தக் கோட்டைக்குள் பழங்கால பீரங்கிகள், ஆழமும் அகலமும் கொண்ட அகழிகள், படை வீரர்கள் தங்கும் பகுதி, சிறைச்சாலை, மண்டபங்கள், கல்யாண மஹால், கோவில், குளம் என காண்பதற்கு ஏராளமான இடங்கள் உள்ளன.

இந்தக் கோட்டையை முதலில் கட்டியவர் ஆனந்த கோனார் என கல்வெட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து விஜயநகரப் பேரரசின் கீழ் இருந்தபோது, இந்தக் கோட்டை மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. முகலாய மன்னர் அவுரங்கசீப்பின் தக்காணப் படையெடுப்பின் போது, சிவாஜியின் இரண்டாவது மகனான சத்ரபதி ராஜாராம் செஞ்சிக் கோட்டைக்கு தப்பி வந்து, அங்கிருந்தவாறு போரிட்டதாக வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய நினைவுச் சின்னமாகத் திகழும் இந்தக் கோட்டை தற்போது தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. செஞ்சி நகருக்கு ஒரு கிலோ மீட்டர் அருகில் இந்தக் கோட்டை இருப்பதால், போக்குவரத்து வசதிகள் ஏராளமாக உள்ளன. ■

> “கோட்டைகள் எல்லாம் கட்டுவதற்கு முன்னரே கோட்டையுடன் வலிமையாகத் திகழ்ந்த ஊர் செஞ்சி. ஆங்கிலேயர் இதனை 'கிழக்கின் ட்ரோய்' என்றனர். முகலாயர்களால் பாதுஷாபாத் என்றும், சோழர்களால் சிங்கபுர நாடு என்றும் செஞ்சிக்கோட்டை அழைக்கப்பட்டது.”

தானியங்கள் தரும் பலன்கள்

கிளாரிபெல், ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்... உள்ளே இருக்குமாம் ஈறும் பேனும்' என்ற முதுமொழி, இன்றைய ஃபாஸ்ட்புட் ஃபேஷனுக்கு நன்கே பொருந்தும். வண்ணங்கள் பல, அலங்கரிப்புகள் பல, ருசியும் கூட பல என்று பரிமாறப் படும் உணவுகளில் உடலுக்குத் தேவையான சத்துக்களை விட நச்சுப் பொருட்கள்தான் அதிகமாக உள்ளன. உல்லாச மாக அப்படி விலை கொடுத்து வாங்கி உண்டவர்கள் பலரும், மீண்டும் பாரம்பரிய சிறுதானிய உணவை நாடித் தேடி ஓட ஆரம்பித்துள்ளனர். உடல் பருமனுள்ளவர்கள், ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்கள், சர்க்கரை நோய், இரத்தக் கொதிப்பு, இன்னும் பலவித நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் சிறுதானிய உணவுகளை மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

'உணவே மருந்து' என்பது முன்னோர் வாக்கு. அன்று முதியவர்கள் கூட கடினமான வேலைகளை மிக எளிதாகச் செய்ததற்குக் காரணம் தான் என்ன? அவர்கள் அருந்தி வந்த ஊட்டச்சத்து மிக்க உணவுகள் தான் காரணம்.

இன்றைய காலக்கட்டத்தில் சிறுவர் முதல் முதியோர் வரை மேலை நாட்டினரின் கலாச்சாரங்களைக் கற்றுக் கொண்டதால் தான் இந்த நிலைமை. இந்நிலை மாற உடனடியாக சிறுதானிய உணவுகளுக்கு மாற வேண்டும். ■

அனைவருக்கும் வங்கிச் சேவைகள்...

பத்மா வெங்கடேசன்
முதுநிலை மேலாளர், இந்தியன் வங்கி

பெரும்பான்மையான வளர்ந்து வரும் நாடுகளில், குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வங்கிச் சேவை கிடைப்பதில்லை என்னும் குறையை தீர்க்க வந்த திட்டமே அனைவருக்கும் வங்கிச் சேவை திட்டம்.

மங்களகரமான இந்த திட்டத்தை புதுவையில் உள்ள மங்கலம் என்னும் கிராமத்தில் 2005ஆம் ஆண்டு இந்தியன் வங்கி துவக்கி வைத்தது. நம் நாட்டிலேயே முதன் முதலாக வங்கிச் சேவையில் தன்னிறைவு பெற்ற முதல் கிராமம் என்னும் பெருமை பெற்றது மங்கலம் கிராமம். இத்திட்டம் துவங்கிய முதலாண்டிலேயே அனைத்து குடும்பங்களையும் சென்று அடைந்த வெற்றிகரமான திட்டம் என்னும் பெருமையும் இக்கிராமத்திற்கு உண்டு. இந்த புதுமை மூலம் பெருமை பெற்றது புதுவை.

புதுவையை பின்பற்றி தமிழகத்தின் கடலூர் மாவட்டத் திலும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் 100% குடும்பங்களையும் ஒருங்கிணைத்து வங்கிச் சேவை அளிக்கப்பட்டது.

இதேபோல் 2007ஆம் ஆண்டு மும்பையில் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் தாராவி பகுதி இத்திட்டத் திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அனைத்து தாராவி வாழ் மக்களுக்கும் வங்கிச் சேவை அளிக்கப்பட்டது. இன்று தாராவியில் பல்வேறு வங்கிக் கிளைகளும், தானியங்கி இயந்திரங்களும் நிறுவப்பட்டுள்ளன. இதேபோல சென்னை கோயம்பேடு சந்தையிலும் ஒருங்கிணைந்த வங்கிச் சேவை அளிக்கப்பட்டு வருகின்றது.

எளிதில் அணுக முடியாத இடங்களுக்குக் கூட வங்கிச் சேவை அளிப்பதற்கு நடமாடும் வங்கிகளும், வங்கி வணிகத் தொடர்பாளர்கள் மூலமும், கைரேகை மூலம் பணம் பட்டுவாடா செய்யும் தானியங்கி இயந்திரங்கள் மூலமும் வங்கிச் சேவை அளிக்கப்பட்டு வருகிறது. நிதி பற்றிய கல்வியறிவு மற்றும் கடன் ஆலோசனை மையங்களும் இயங்கி வருகின்றன.

மேலும் வங்கிக் கிளைகள் இல்லாத பகுதிகளில் கணினி வாயிலாக செயல்படுத்தப்படும் சின்னஞ்சிறு வங்கிக் கிளைகள் துவக்கப்பட்டு வங்கிச் சேவை வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஒரு காலத்தில் தனிப்பட்ட மேல்தட்டு மக்களுக்கு மட்டுமே என்று இருந்த வங்கிச் சேவை தற்போது அனைத்து மக்களுக்கும் எளிதில் கிடைத்து வருவது நாம் அனைவரும் பெருமை கொள்ளும் செயல் அல்லவா! ■

> எளிதில் அணுக முடியாத இடங்களுக்குக் கூட நடமாடும் வங்கிகள் மற்றும் கைரேகை மூலம் பணம் பட்டுவாடா செய்யும் தானியங்கி இயந்திரங்கள் மூலம் வங்கிச் சேவைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் விபரங்களுக்கு இந்தியன் வங்கி,
கார்ப்பரேட் அலுவலகத்தை அணுகவும் / போன்: 2813 4036

(தொடரும்)

என் தாய்நாட்டை நான் உளமார நேசிக்கிறேன்

68வது சுதந்திர தினக் கொண்டாட்டம்...

இந்தியாவின் 68வது சுதந்திர தின விழா நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை கோட்டையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேசியக் கொடியேற்றி வைத்து சுதந்திர தின விழா உரை நிகழ்த்தினார்கள். முன்னதாக முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, திறந்த ஜீப்பில் சென்று அணிவகுப்பைப் பார்வையிட்டார்கள்.

இவ்விழாவில் பல்வேறு சாதனைகள் புரிந்தவர்களுக்கு விருதுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். துணிவு மற்றும் சாகச செயல்களுக்கான கல்பனா சாவ்லா விருது நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி. ஆர். பொன்னிக்கு வழங்கப்பட்டது. தலைமைச் செயலக தகவல் தொழில்நுட்ப பிரிவு, மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகியவைகளுக்கு முதலமைச்சரின் நல் ஆளுமை விருது வழங்கப்பட்டது.

> “நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைக்கு முதலமைச்சரின் நல் ஆளுமை விருது வழங்கப்பட்டது. துணிவு மற்றும் சாகச செயல்களுக்கான கல்பனா சாவ்லா விருது நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி. ஆர். பொன்னிக்கு வழங்கப்பட்டது.”

மாற்றுத் திறனாளிகள் நலனுக்கு சிறப்பாக சேவை செய்ததற்கான தமிழக அரசின் விருது, சென்னை அகர்வால் கண் மருத்துவமனையின் பேராசிரியர் திரு. அமர் அகர்வாலுக்கும், சிறந்த சமூகப் பணியாளர் விருது திருநெல்வேலியைச் சேர்ந்த மெர்சி ஹோம் சகோதரி. விர்ஜித் ஜான்சிக்கும், சிறந்த அமைப்புக்கான விருது திருவள்ளூர் மாவட்டம் கிழக்கு முகப்பேரில் செயல்பட்டு வரும் சிருஷ்டி சிறப்புப் பள்ளிக்கும். மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவு வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனத்திற்கான விருது சக்தி மசாலா நிறுவனத்திற்கும், சேலத்தில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு சிறந்த வங்கிக்கான விருது, மகளிர் நலனுக்காக சிறப்பாக தொண்டாற்றிய தொண்டு நிறுவனம் மற்றும் சமூக பணியாளர்களுக்கான விருது திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஷேர் அறக்கட்டளைக்கும், சிறந்த சமூக பணியாளர் விருது சேலம் ஓமலூர் வட்டார மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துக்கும் வழங்கப்பட்டது.

சிறந்த மாநகராட்சியாக திருச்சி மாநகராட்சியும், சிறந்த நகராட்சிகளாக கும்பகோணம், குமாரபாளையம், மற்றும் பெரியகுளம் ஆகிய நகராட்சிகளும், சிறந்த பேரூராட்சிகளாக தலைஞாயிறு, அலங்காநல்லூர் மற்றும் மேலசொக்கநாதபுரம் ஆகிய பேரூராட்சிகளும் தேர்வு செய்யப்பட்டு பரிசு காசோலைகளும், விருதுகளும் வழங்கப்பட்டன.

இந்த விழாவில் உயர்நீதிமன்ற நீதிபதிகள், மக்களவைத் துணைத்தலைவர், தமிழக சட்டப்பேரவை சபாநாயகர், அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துறைச் செயலாளர்கள், அரசு உயர் அதிகாரிகள், சுதந்திரப் போராட்டத் தியாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். ■

கொடி வணக்கம்

கல்பனா சாவ்லா விருது

மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்குதல்

முப்படை வீரர்களின் மரியாதையை ஏற்றுக் கொள்ளுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் விருது பெற்றவர்கள்

ஜனாதிபதியின் ஒப்புதலுக்குப் பிறகு 2013 ஏப்ரல் 3ஆம் தேதி ‘குற்றவியல் சட்டம் – 2013’ என்ற சட்ட வடிவத்தை பெற்றது.

பெண்களைக் காக்கும் சட்டங்கள்

பாலியல் குற்றங்களுக்கு எதிரான புதிய சட்ட மசோதா

இந்திய தண்டனைச் சட்டம், இந்திய குற்றவியல் சட்டம் மற்றும் இந்திய சாட்சிய சட்டம் ஆகிய சட்டங்களில் உள்ள சில சட்ட பிரிவுகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் சில சட்ட பிரிவுகள் புதியதாக சேர்க்கப்பட்டுள்ளன. இந்த சட்ட திருத்தத்தால் இதுவரை குற்றமாகப் பார்க்கப்படாத சில விவகாரங்கள் குற்றமாக்கப்பட்டுள்ளன. அதேபோல் திருத்தம் செய்யப்பட்ட சில குற்றங்களுக்கு தண்டனையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மருத்துவக்கல்லூரி மாணவி ஒருவர் டெல்லியில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டதன் எதிரொலியாக, பெண்களுக்கெதிரான மற்றும் பாலியல் தொடர்பான குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும், அதற்குத் தேவையான சட்ட திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்குடன், ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. ஜே. எஸ். வர்மா அவர்களின் தலைமையில் ஒரு நீதிக்குழுவை மத்திய அரசு அமைத்தது. பொதுமக்கள், மகளிர் அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், சட்ட வல்லுனர்கள், நீதித் துறையை சார்ந்தவர்கள் என பலதரப்பட்டவர்களையும் விசாரித்து, கலந்து ஆலோசித்து வர்மா குழு தன்னுடைய பரிந்துரையை அரசாங்கத்திற்கு வழங்கியது.

நீதிபதி வர்மா குழு வழங்கிய பரிந்துரைகளை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தது. பின்னர் அரசாங்கம் பாலியல் குற்றங்களுக்கு எதிரான ஒரு புதிய சட்ட மசோதாவை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்து, அந்த சட்ட மசோதா பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதியின் ஒப்புதலுக்குப் பிறகு 2013 ஏப்ரல் 3ஆம் தேதி ‘குற்றவியல் சட்டம் – 2013’ என்ற சட்ட வடிவத்தைப் பெற்றது.

மேற்சொன்ன சட்டத்தின் வாயிலாக ஏற்கனவே இருக்கும் இந்திய தண்டனைச் சட்டம், இந்திய குற்றவியல் சட்டம் மற்றும் இந்திய சாட்சியச் சட்டம் ஆகிய சட்டங்களில் உள்ள சில சட்ட பிரிவுகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் சில சட்ட பிரிவுகள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன. இந்த சட்ட திருத்தத்தால் இதுவரை குற்றமாகப் பார்க்கப்படாத சில விவகாரங்கள் குற்றமாக்கப் பட்டுள்ளன. அதேபோல் திருத்தம் செய்யப்பட்ட சில குற்றங்களுக்கு தண்டனையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

“இந்த சட்ட திருத்தங்களில் முக்கிய மாற்றம் கொண்டு வரப்பட்டிருப்பது கற்பழிப்பு குற்றத்தில்தான். இதுநாள் வரை கற்பழிப்பு என்று சொல்லப்பட்ட குற்றம் சட்ட திருத்தத்திற்குப் பிறகு பாலியல் தாக்குதல் என்று அழைக்கப்படுகிறது.”

திராவகம் வீசுதல்

மகளிர் மற்றும் குழந்தைகள் மீது திராவம் வீசினால் இந்திய தண்டனைச் சட்டம் 326 (பிரிவு ஏ)ன்படி 10 ஆண்டு முதல் ஆயுட்காலம் வரை சிறை தண்டனை வழங்கப்படும். கூடவே 10 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும். மற்றவர்கள் மீது திராவகம் வீச முயற்சித்தால் இந்திய தண்டனைச் சட்டம் 326 (பிரிவு பி)ன் கீழ் 5 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

பாலியல் தொந்தரவு செய்தல்

(இந்திய தண்டனைச் சட்டம், 354–ஏ)

தவறான நோக்கத்தோடு ஒருவரைத் தீண்டுதல், வெளிப்படையாக வல்லுறவுக்கு அழைத்தல், உறவு வைத்துக் கொள்ள மற்றவரை அழைத்தல் அல்லது வேண்டுதல் போன்ற குற்றங்களில் எவரேனும் ஈடுபட்டால் அவர்களுக்கு ஐந்தாண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை வழங்கவும்,

பாலியல் ரீதியாக மற்றவர்கள் மீது ஆபாசமான வார்த்தைகளைப் பயன்படுத்துதல் அல்லது குறிப்பிடுதல், வலுக்கட்டாயமாக ஒருவரை ஆபாசப் படங்களை பார்க்கச் செய்தல், மற்றவர்கள் மீது பாலியல் ரீதியாக தேவையற்ற செய்கைகளில், வார்த்தைகளில் ஈடுபடுதல் போன்றவற்றிற்கு ஒரு ஆண்டு சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக வழங்கவும் இந்திய தண்டனைச் சட்டம், 354 (பிரிவு ஏ) கீழ் வழியுள்ளது.

பொது இடங்களில் பெண்களை மானபங்கப்படுத்தல்

(இந்திய தண்டனைச் சட்டம், (பிரிவு 354 பி)

பொது இடங்களில் பெண்களை மானபங்கப்படுத்துதல் (ஆடைகளைக் களைதல்) போன்ற குற்றங்களுக்கு இந்திய தண்டனைச் சட்டம், (பிரிவு 354 பி)ன் கீழ் மூன்று ஆண்டுகள் முதல் ஏழு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

> “இணையம், மின்னஞ்சல் அல்லது வேறு மின்னணு தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி மற்றவர்களை தொடர்வது, தொந்தரவு செய்வது அல்லது வேவு பார்த்து மன உளைச்சலை ஏற்படுத்துவது போன்றவை தண்டனைக்குரிய குற்றமாகும்.”

பெண்களின் அந்தரங்கத்துக்கு குந்தகம்/பாதிப்பு/ஊறு விளைவிப்பது / பங்கம் ஏற்படுத்துவது – இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 354 சி

ஒரு பெண் தனிமையில் இருக்கும் (பொது இடங்களில் இல்லாத போது) போது அவருடைய அந்தரங்கங்களைப் பார்ப்பது அல்லது படம் பிடிப்பது குற்றமாகும். இத்தகைய குற்றங்களுக்கு இந்திய தண்டனைச் சட்டம் (பிரிவு 354 சி)ன்படி, முதல் முறை இந்தக் குற்றத்தை நிகழ்த்தினால் ஓர் ஆண்டுக்கு குறையாமல் மூன்றாண்டுகள் வரை சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும். இரண்டாம் முறையாக மேற்சொன்ன குற்றத்தை ஒருவர் செய்தார் என்றால் அவருக்கு மூன்றாண்டுகள் முதல் ஏழாண்டுகள் வரை சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்.

ஒரு நபரை அவரது விருப்பத்திற்கு மாறாகப் பின் தொடர்தல் – இந்திய தண்டனைச் சட்டம் (பிரிவு 354 டி)

ஒருவருக்கு விருப்பம் இல்லாத போதும் அவரைப் பின் தொடர்தல் அல்லது இணையத்தின் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது வேறு மின்னணு தொலைத்தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தியோ மற்றவர்களை தொடர்வது, தொந்தரவு செய்வது அல்லது வேவு பார்த்து மன உளைச்சலை ஏற்படுத்துவது போன்றவைகள் குற்றங்களாகும். மேற்படி குற்றமிழைத்தவருக்கு இந்திய தண்டனைச் சட்டம் (பிரிவு 354 டி)ன்படி ஓராண்டு முதல் மூன்றாண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

ஆள் கடத்துதல் – இந்திய தண்டனைச் சட்டம், 370

யாரேனும் விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதற்காகவே அல்லது அடிமைப்படுத்துவதற்காகவோ அல்லது கட்டாயமாக உடல் உறுப்புகளை எடுப்பதற்காகவோ ஆள் கடத்துதலில் ஈடுபட்டால் அவர்களுக்கு இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 370ன் கீழ் 7 ஆண்டுகள் முதல் ஆயுள் வரை (கடத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கையை பொருத்து) சிறைத் தண்டனை வழங்கலாம். கடத்தப்பட்ட நபரை வேலைக்கு ஆட்படுத்துவதும் குற்றமாகும்.

இச்சட்டத் திருத்தங்களில் முக்கிய மாற்றம் கொண்டு வரப்பட்டிருப்பது கற்பழிப்பு குற்றத்தில்தான். இதுநாள் வரை கற்பழிப்பு என்று சொல்லப்பட்ட குற்றம் சட்ட திருத்தத்திற்குப் பிறகு பாலியல் தாக்குதல் என்று அழைக்கப்படுகிறது. பாலியல் தாக்குதல் என்ற குற்றம் விரிவாக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை 'கற்பழிப்பு' 'பலாத்காரம்' 'வன்புணர்ச்சி' என்றால் என்ன மாதிரியான குற்றம் என்று அனைவருக்கும் தெரிந்த விதத்திலிருந்து மேலும் சில விபரங்களை உட்சேர்த்து பாலியல் தாக்குதல் என்றால் என்ன? என்று திருத்தப்பட்ட சட்டம் ஒரு பெரிய விளக்கத்தை அளித்திருக்கிறது.

இந்த பாலியல் தாக்குதல் சாதாரணமாக இருந்தால் சம்பந்தப்பட்ட குற்றவாளிக்கு ஏழாண்டுகள் முதல் ஆயுள் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். இதே அந்தத் குற்றம் பெரியதாக இருந்தால் பத்தாண்டுகள் முதல் ஆயுள் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

பாலியல் தாக்குதலினால் ஒருவர் இறந்து விட்டால் அல்லது அந்தத் தாக்குதலின் காரணமாக ஒருவர் நடைப்பிணமாக ஆனார் என்றால், அத்தகைய குற்றத்தை இழைத்தவருக்கு 20 ஆண்டுகள் முதல் ஆயுள் வரை சிறைத் தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்படும்.

கூட்டாகச் சேர்ந்து பாலியல் தாக்குதலில் ஈடுபடுபவர்களுக்கு 20 ஆண்டுகள் முதல் ஆயுள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் குற்றவாளிகள், பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ செலவிற்காகவும், புனர் நிர்மானத்திற்காகவும் தகுந்த இழப்பீடு வழங்க வேண்டும். ■

அழகுக் குறிப்புகள்

நமது மேனி அழகைக் காக்க இயற்கை பல்வேறு பொருட்களை வழங்கியுள்ளது. நாம் அன்றாடம் பயன்படுத்தும் சாதாரணப் பொருட்களைக் கொண்டே அழகைப் பராமரிக்கும் பொருட்களைத் தயாரிக்கலாம்.

தேன்

முருங்கை இலைச்சாறு, எலுமிச்சை சாறு மற்றும் தேன் ஆகிய மூன்றையும் கலந்து, முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மேல் தடவி வந்தால் நாளடைவில் கரும்புள்ளிகள் மறையும். அதேபோல் பப்பாளி பழத்தை மசித்து தேன் கலந்து முகத்தில் தடவினாலும் நல்ல பலன் கிடைக்கும்.

தக்காளி

தக்காளியுடன் வெள்ளரிக்காயை சேர்த்து மைபோல அரைத்து முகத்தில் பூசி, சிறிது நேரம் கழித்து முகத்தைத் தண்ணீரால் கழுவ வேண்டும். இப்படி அடிக்கடி செய்து வந்தால் முகத்தில் கரும்புள்ளிகள் ஏற்படுவது தடுக்கப்படும்.

வெந்தயக்கீரை

வெந்தயக் கீரையை அரைத்து முகத்தில் பூசி, 15 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இதை அடிக்கடி செய்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறையும்.

சிறுகதை

முயல் வேட்டை

ஒரு விவசாயி தனது தோட்டத்தில் பல்வேறு வகையான காய்கறிகளைப் பயிரிட்டு இருந்தான். நல்ல முறையில் தோட்டத்தை பராமரித்து வந்ததால் காய்கறிகள் ஏராளமாக விளைந்து இருந்தன. ஆனால் தினமும் முயல் ஒன்று தோட்டத்திற்குள் புகுந்து காய்களை சாப்பிட்டு வந்தது. விவசாயி முயலைப் பிடிக்க பல்வேறு முயற்சிகளை செய்தாலும் முயல் அவனிடம் சிக்கவே இல்லை.

எப்படியும் முயலைப் பிடித்தாக வேண்டும் என்று நினைத்த விவசாயி, அரசனிடம் சென்று, 'அரசே என் தோட்டத்தை முயல் ஒன்று பாழாக்குகிறது. நீங்கள் அந்த முயலைப் பிடிக்க எனக்கு உதவ வேண்டும்' என்றான். உடனே அரசன், 'ஒரு முயலைப் பிடிக்க உன்னால் முடியவில்லையா?' என்று கேட்டான். 'அந்த முயலுக்கு மாய மந்திரம் தெரியும் போல் உள்ளது. நான் அதைப் பிடிக்க ஓடினால் அது என் கையில் சிக்காமல் மறைந்து விடுகிறது' என்று விவசாயி கூறினான். உடனே அரசன் 'நாளை எனது வீரர்களுடனும், வேட்டை நாய்களுடனும் வந்து அந்த முயலைப் பிடிக்கிறேன்' என்று கூறினான்.

இதைக் கேட்ட விவசாயி மிக்க மகிழ்ச்சியுடன் இனி முயலின் தொல்லை இருக்காது என்று நினைத்து, அரசனுக்கும், அவனுடைய வீரர்களுக்கும் விருந்திற்கு ஏற்பாடு செய்தான். மறுநாள் அரசன், வீரர்களுடன், வேட்டை நாய்களுடனும் தோட்டத்திற்கு வந்தான்.

எல்லோரையும் வரவேற்ற விவசாயி, அவர்களுக்கு சிறப்பாக விருந்தளித்தான். விருந்து முடிந்ததும், விவசாயியின் உபசரிப்பில் மகிழ்ந்த அரசன், 'இன்னும் சிறிது நேரத்தில் அந்த முயல் என்ன கதி ஆகிறது பார்' என்று சொல்லி முயலை வேட்டையாடப் புறப்பட்டான் அரசன்.

> "'சிறிய வேலைக்கு பெரியவர்களிடம் உதவி கேட்டது தவறு என்று உணராமல் போனேனே? என்று விவசாயி வருந்தினான்."

கொம்புகளை ஊதிக் கொண்டு வேட்டைக்காரர்களும், வேட்டை நாய்களும் தோட்டத்திற்குள் பாய்ந்தன. புதரில் மறைந்திருந்த முயல் பயந்து வெளியே வந்து தோட்டத்தின் வேலியை நோக்கி செடிகளின் நடுவே ஓடியது. அதைப்பார்த்த வேட்டைக்காரர்கள் 'விடாதே பிடி' என்று சத்தம் போட்டபடி தோட்டத்தில் விளைந்திருந்த செடிகளை மிதித்துக் கொண்டு ஓடினர்.

நீண்ட நேரப் போராட்டத்திற்குப் பின்னர் அரசனின் வேட்டை நாய் ஒன்று முயலைக் கவ்விப் பிடித்தது. வெற்றிக் களிப்புடன் முயலை விவசாயியிடம் காட்டிய அரசன், 'இனி முயலால் உனது தோட்டத்திற்கு எந்த தொல்லையும் இல்லை' என்று சொன்னான்.

இந்தப் போராட்டத்தில் முயல் சிக்கி விட்டாலும், தோட்டம் முழுவதும் பாழாகி விட்டதைக் கண்ட விவசாயி மிகவும் வருத்தம் அடைந்து, 'சிறிய வேலைக்கு பெரியவர்களிடம் உதவி கேட்டது தவறு என்று உணராமல் போனேனே? என் அழகான தோட்டம் அழிந்து விட்டதே? ஆயிரக்கணக்கான முயல்கள் சேர்ந்து பல நாட்கள் வந்து சாப்பிட்டாலும் கூட தனது தோட்டத்தை இப்படி அழித்திருக்க முடியாதே? என் முட்டாள்தனத்தால் பேரழிவைத் தேடிக் கொண்டேனே' என்று தனக்கு தானே சொல்லிக் கொண்டு சோகத்துடன் வீடு திரும்பினான். ■

செல்வி. ஆர். கமலம், இ.ஆர், நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

நமது நாடு உலகளவில் பழங்களை உற்பத்தி செய்வதில் முதல் இடத்திலும், காய்கறி வகைகளை உற்பத்தி செய்வதில் இரண்டாம் இடத்திலும் உள்ளது. ஆனால் அறுவடைக்குப் பின் பத்திரப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பின்மையால் ஏற்படும் பேரிழப்பினால் உற்பத்தியாளருக்கு இலாபமும், தனிநபருக்கு கிடைக்க வேண்டிய அளவிற்கு பழங்கள், காய்கறிகளும் நமக்குக் கிடைப்பதில்லை.

கிராமப்புற வியாபார சரக்கு கிடங்கு (Rural Godown) (கட்டுதல், பராமரித்தல், உபயோகித்தல்)

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி உற்பத்தி செய்த விளைபொருட்கள், தகுந்த பாதுகாப்பின்மையால் மக்களுக்குப் பயன்படாமல் போவது மட்டுமல்லாமல், விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான இலாபம் குறைவதுடன், சில சமயம் நட்டத்தையும் ஏற்படுத்துகிறது. விவசாய விளைபொருட்கள் குறிப்பாக பூ, பழங்கள், பால், பதப்படுத்தும் திடப் பொருட்கள், காய்கறிகள், கீரைகள் போன்றவை எளிதில் அழுகும் பொருட்களாகும். அவற்றை உடனடியாகவோ, பதப்படுத்தியோ பல இடங்களுக்கு அனுப்பி வியாபாரம் செய்ய முடியாத நிலையினால் அதிக அளவில் தேக்கம் ஏற்பட்டு, பாதுகாப்பின்மை யால் வீணாகும் நிலையும் ஏற்படுகிறது.

மேற்கூறியவைகளால், விவசாயிகளுக்கு ஏற்படும் நட்டத்தை தவிர்த்து இலாபகரமாக மாற்றிட சாதாரண சேமிப்பு கிடங்குகள், குளிர்சாதன சேமிப்பு கிடங்குகள் அவசியமாகிறது.

கிராமப்புற சரக்கு கிடங்கின் முக்கியப் பயன்கள்

1. விவசாயப் பொருட்கள் கெட்டுப் போகாமலும் மற்றும் வீணாகாமலும் பாதுகாக்க உதவும்.
2. விளை பொருட்களை, அறிவியல் பூர்வமாக சேமித்து வைக்கவும், கொள்ளளவு மற்றும் அதன் தொடர்புடைய வசதிகளை கிராமப்புறங்களில் ஏற்படுத்துவதன் மூலமும், விவசாய பொருட்கள், பதப்படுத்தப்பட்ட விளை பொருட்கள் ஆகியவற்றை பத்திரமாக சேமித்து வைக்கும் தேவையைப் பூர்த்தி செய்ய உதவுகிறது.
3. தர வாரியாகப் பிரித்தல், தர நிர்ணயம் மற்றும் இயற்கை பண்பு மாறாமல் தர கட்டுப்பாடு ஆகியவற்றை மேம் படுத்துவதன் மூலம் விவசாயப் பொருட்களின் மதிப்பை உயர்த்த உதவுகிறது.
4. அறுவடையான உடன் மிக குறைந்த விலையில் விற்று நட்டம் ஏற்படுவதை தடுக்க, அப்பொருட்களை சேமிப்பு கிடங்குகளில் பாதுகாத்து, சிறிது காலம் கழித்து நல்ல விலையில் விற்று இலாபம் ஈட்டவும் உதவுகிறது.
5. சேமிப்பு கிடங்குகளில் பாதுகாக்கப்பட்ட விளை பொருட்களைப் பற்றிய ரசீதை (Wear Housing Receipt), வங்கிகளில் கொடுத்து, அதன் மேல் அடமானக் கடன் பெறுவதின் மூலம், தற்காலிக பணத் தேவை மற்றும் மேற்கொண்டு விவசாயம் செய்ய தேவைப்படும் பணத்தை பெறவும் உதவுகிறது.
6. மேற்கூறியவைகளால், விவசாய தொழிலில் தனியார், கூட்டமைப்பு, பெரிய நிறுவனங்கள் போன்றவர்கள் அதிக முதலீடு செய்யவும், உணவு உற்பத்தியை பெருக்கவும் ஊக்குவிக்கப்படுகின்றனர். ■

(தொடரும்)

வளமாக்கும் வங்கி சேவைகள் "சிறப்பு பார்வை"

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

> பல விவசாயப் பொருட்களை, அறுவடைக்குப் பின் சிறிது காலம் கழித்து விற்றால், விவசாயிகளுக்கு, நல்ல இலாபத்தை ஈட்டிக் கொடுக்கும்.

வீட்டில் தயாராகும் உணவு வகைகளை விட கடைகளில் விற்கப்படும் உடனடி உணவுகள் ஊட்டச் சத்து குறைந்தவையே.

துரித உணவுகள் துரிதமாக கேடு விளைவிக்குமா?

துரித உணவு, உடனடி உணவு, ஜங்க் புட் (நொறுக்குத் தீனி) போன்ற உணவு வகைகள் நலம் தராத உணவுகளின் மறு பெயர்களாகும். இவைகளை உண்பதின் மூலம் உடல் பருமன், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற வளர்ச்சிதை மாற்றங்கள் உண்டாகலாம். உடனடி உணவில் உள்ள அதிக கொழுப்புகள் இதயத்தை கடுமையாகப் பாதிக்கும் தன்மை கொண்டவையாகும்.

உடனடி உணவுகள், குளிர்விக்கப்பட்ட அல்லது உறைந்த நிலையில் இருப்பதால், அவைகளின் சுவை குறைகிறது. இதைத் தவிர்க்கும் பொருட்டு உணவுத் தயாரிப்பாளர்கள், அதன் சுவையை தக்க வைக்க சர்க்கரை, உப்பு, கொழுப்பு, நறுமணம், வண்ணங்கள் போன்றவற்றை சேர்க்கிறார்கள். இது மனித உடலுக்கு ஊறு விளைவிக்கிறது.

உடனடி உணவுகள் கெடாமல் இருக்க சேர்க்கப்படும் பதனப் பொருட்கள் மற்றும் ரசாயனங்கள் உடலில் நச்சுத்தன்மையை உண்டாக்கி சிறுநீரகம், கல்லீரல் ஆகியவற்றைப் பாதிக்கும். உடனடி உணவுகளைத் தொடர்ந்து சாப்பிடுவதால், உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் கிடைக்காமல் உடல் வளர்ச்சியை குறைத்து நோய் எதிர்ப்புச் சக்தியில்லாமல் செய்கிறது. உடனடி உணவு வகைகளில் 'சூடுபடுத்தி சாப்பிடப் பயன்படும்' உணவுகளும் அடங்கும்.

உடனடி உணவுகள் பிரபலமாகக் காரணங்கள் என்ன?

அதிக காலத்திற்கு சேமித்து வைக்க முடியும்; தயாரிக்க குறைவான நேரமே போதும்; சமையலறிவு அதிகம் தேவையில்லை; சமைக்கும் வரம்பு அதிகம் அல்லது குறைவுஎன்றநிலைஇல்லை;எளிதில்கிடைக்கக்கூடியது; அதிகமாகி விட்ட சிறு குடும்பங்கள்; பணிபுரியும் ஆண், பெண் அளவு அதிகரிப்பு; பொருளாதார முன்னேற்றம்; சமையலறையில் குறைந்த நேரம் செலவழித்தல்; பயணங்களில் கொண்டு செல்லலாம்; வேலை சுமை மற்றும் எரிபொருளை குறைக்கிறது; பல வகைகளில் சந்தையில் கிடைக்கிறது போன்ற பல காரணங்களால் உடனடி உணவுகள் பிரபலமாகின்றன.

மேலும் உணவுத் தேவையை உடனடியாகப் பூர்த்தி செய்கிறது; சமையல் செய்ய நேரமில்லாத நிலை; விருந்தினர்களின் திடீர் வருகையின் போது அவசர உணவாகப் பயன்படுகிறது; சமையல் செய்யும் நேரத்தை பிற வேலைகளில் பயன்படுத்தலாம் என் மனநிலையும் உடனடி உணவுகள் பிரபலமாக காரணங்கள்.

உடனடி அல்லது வசதிக்கேற்ற உணவுகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்

சூடுபடுத்தி உண்ணக் கூடிய உணவு வகைகள்

இந்த வகை உணவுகள் ஒரு பாக்கெட்டில் அடைத்து சூடுபடுத்தி உண்ணும் வகையில் வழங்கப்படுகின்றன. நீண்ட வாழ்நாள் கொண்ட உணவு வகையாக இவைகள் இருக்க நன்கு சுத்தமாக்கப்பட்ட அழுத்தமான பாக்கெட்டுகளில் அடைத்து விற்கின்றனர்.

எனினும் 1210 செ. வெப்ப நிலையில் சூடுபடுத்தப் படுவதாலும், 1 முதல் 2 ஆண்டுகள் வரை சேமித்து வைப்பதாலும், வண்ணம், மணம், ஊட்டச்சத்துக்கள் குறைய வாய்ப்புள்ளது. வெஜிடபிள் கரிஸ், அரிசி தயாரிப்புகள், முழு உணவுகள் அல்லது காலை உணவுகள் முதலியன இவ்வகை உணவில் அடங்கும்.

உண்ணத் தயார் நிலை உணவுகள்

ஏதும் செய்யாமல் உடனடியாக பிரித்தவுடன் உண்ணக் கூடியவையாகும். (உ-ம்) இந்தியர்களின் கொறிக்கும் உணவுகளான சர்க்கரை அல்லது தானியத்தை அடிப்படையாகக் கொண்ட இனிப்புகள் அல்லது பஜ்ஜி, பக்கோடா போன்ற கொறிக்கும் வகைகள். ■

(இந்த கொறிப்பு அடுத்த இதழிலும் தொடரும்)

நன்றி – நுகர்வோர் மஞ்சரி / ஜுலை 2014

வேணி: சுகாதார வளாகங்களைப் பற்றி சொல்லுங்க சுபா...

சுபா: தமிழகத்தில் கிராமப்புற பெண்களுக்கு வசதியாக மகளிர் சுகாதார வளாகங்கள் இருப்பதும், சமீபத்தில் அவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தர வின்படி புதுப்பிக்கப்பட்டு மேலும் சிறப்பாக இயங்குவதும் உங்க அனைவருக்கும் ஏற்கனவே தெரியுமே...!

வேணி: மத்த மாநிலங்களிலும் இந்த வளாகங்கள் இருக்கா?

சுபா: சமீபத்தில் உத்தர பிரதேசத்தில் இரண்டு இளம்பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப் பட்டார்கள். இந்த சம்பவத்திற்கு காரணம் பெண்களுக்கு வசதியான, பாதுகாப்பான கழிப்பறைகள் இல்லை என்ற நோக்கில், இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்களிலும், தமிழகத்தில் செயல்படும் மகளிர் சுகாதார வளாக முறையை பின்பற்றச் சொல்லி மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது.

பார்வதி: சுகாதார வளாகங்களுக்கு வரவேற்பு இருக்கா?

சுபா: தமிழகம் முழுவதும் 12,796 சுகாதார வளாகங்கள் உள்ளன. கழிப்பறை வசதி மட்டுமின்றி துணி துவைக்கவும், குளிக்கவும், நாப்கின்களை பாதுகாப்பாக வெளியேற்றவும், தண்ணீர் மற்றும் மின் வசதிகளுடன் எந்நேரமும் இந்த வளாகங்கள் சுகாதாரமாக இருக்கு. பள்ளிக்குச் செல்லும் வளரிளம் பெண்களும், ஏனைய இளம் பெண்களும், எந்த பயமும் இல்லாமல் சுயமரியாதையுடன் சுகாதார வளாகத்தை பயன்படுத்தி வருகிறார்கள். வயதானவர்களுக்கு மேற் கத்திய முறையிலான கழிப்பிடமும், குழந்தைகளுக்கான கழிப்பிடமும் ஒரே இடத்தில் இருக்கிறதால சுகாதார வளாகங்கள் பெரிய வரவேற்பினைப் பெற்று வருகின்றன.

செல்லாயி: சுகாதார வளாகத்தால என்ன நன்மை?

சுபா: சுகாதார வளாகத்தைப் பயன்படுத்தியவர்கள் தங்கள் வீடுகளிலும் கழிப்பறைக் கட்டணும் என்ற உற்சாகத்துடன் அரசு அளிக்கும் ரூ. 11,100/– மானியத்தைப் பற்றிய விவரங்களை சுய உதவிக் குழுக்கள் மூலமாகத் தெரிந்து கொண்டு கட்டுமானப் பணிகளைத் துவக்கியுள்ளனர்.

செல்லாயி: ஆண்களுக்கும் சுகாதார வளாகங்கள் இருக்கா?

சுபா: வெவ்வேறு ஊர்களில் ஆண்கள் சுய உதவிக் குழுக்கள் மூலமாகவும், பஞ்சாயத்து மூலமாகவும் 770 ஆண்கள் சுகாதார வளாகங்கள் செயல்பட்டுகின்றன. இந்த வளாகங்களின் செயல்பாடுகளுக்கு சிறந்த எடுத்துக் காட்டாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்துமலை பேருந்து நிலையத்திற்கு பக்கத்துல அமைந்துள்ள ஆண்கள் சுகாதார வளாகத்தை குறிப்பிடலாம். இந்த வளாகத்தை தினமும் 100 ஆண்கள் மற்றும் சிறுவர்கள் பயன்படுத்துகிறார்கள். அங்குள்ள ஆண்கள் சுய உதவிக் குழுவிலிருந்து ஒரு உறுப்பினர் பொறுப்பேற்று, அவரே அனைத்துக் கழிப் பறை மற்றும் குளிப்பறைகளை சுத்தம் செய்து பராமரித்து வருகிறார். இதன் மூலம் இந்த உறுப்பினருக்கு கணிசமான வருவாயும் கிடைத்து வருகிறது. சுகாதார வளாகங்களில் பஞ்சாயத்து மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தண்ணீர் வசதி பல மைல் தூரம் சென்று திறந்த வெளியில் மலம் கழித்த ஆண்களை சுகாதார வளாகத்துக்கு வரவழைத்துள்ளது. தங்கள் வீடுகளிலும் கழிப்பறை கட்ட வேண்டும் என்ற உத்வேகத்துடன் கழிப்பறை கட்ட அரசு வழங்கும் மானியத் தொகையினை பெறுவதற்கான விண்ணப்பங்களை வாங்க பஞ்சாயத்து அலுவலகங்களை ஆண்கள் நாடி வருகின்றனர்.

செல்லாயி: அரசு மானியம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் எங்கு கிடைக்கும்?

சுபா: வீடுகளில் கழிப்பறைகள் கட்ட அரசு வழங்கும் மானியத்தை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள், நியாய விலைக் கடைகள், பள்ளிகள், அங்கன்வாடிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நூறு நாள் வேலைவாய்ப்புத் திட்ட மேற்பார்வையாளர்கள் போன்ற வர்களிடம் கிடைக்கச் செய்ய அரசு திட்டமிட்டுள்ளதால், இனிமேல் அரசு மானியம் பெறுவதற்கு வேறெங்கும் அலையத் தேவையில்லை. எனவே உணரப்பட்ட தேவை யும், உடனுக்குடன் மானியங்களைப் பெற உருவாக்கப் பட்டிருக்கும் வழி வகைகளும், தமிழகத்தை விரைவில் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத மாநிலமாக உருவாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

நாடு முழுவதும் துவங்கியுள்ள சுகாதாரப் புரட்சியில் பங்கு பெறுவோம்! திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை விட்டொழிப்போம்!! ■

தமிழகத்தில் ஒரு சுகாதாரப் புரட்சி

"பள்ளிக்குச் செல்லும் வளரிளம் பெண்களும், ஏனைய இளம் பெண்களும் சுகாதார வளாகத்தை பயன்படுத்தி வருகிறார்கள்."

பல்நோக்கு பயிற்சி மற்றும் உற்பத்தி மையம்

இராமநாதபுரம் மாவட்ட பல்நோக்கு பயிற்சி மையம் மற்றும் உற்பத்தி மையத்தில் தற்போது சக்கரைக்கோட்டை, காரேந்தல் மற்றும் கும்பாரம் ஆகிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும், சினேகம், மல்லிகை, இயற்கை, காந்திஜி மற்றும் செம்மலர் ஆகிய சுய உதவிக் குழுக்களும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

சானிடரி நாப்கின் உற்பத்தி மையம்

சினேகம்சுயஉதவிக்குழுவின்மூலம்சானிடரி நாப்கின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொண்டு, பட்டணம்காத்தான் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள 20 உறுப்பினர்களுக்கு நாப்கின் தயார் செய்யும் பயிற்சி வழங்கப்பட்டு, தற்பொழுது அவர்களும் நாப்கின் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் தயார் செய்யும் நாப்கின்கள் தர பரிசோதனை செய்யப்பட்டு MHP திட்டத்தில் சுகாதாரத் துறைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

பிளாஸ்டிக் சேகரிப்பு மற்றும் மறுசுழற்சி மையம்

சர்க்கரைக்கோட்டை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சார்பில் பிளாஸ்டிக் மறுசுழற்சி மையம் செயல்படுகிறது. இராம நாதபுரம் மாவட்டத்தில் உள்ள 4 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் 429 ஊராட்சிப் பகுதிகளில் இருந்து சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் இம்மையத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. பின்னர் அவைகள் இயந்திரங்கள் மூலம் துகள்களாக்கப்பட்டு ஒரு கிலோ பிளாஸ்டிக் துகள் ரூ. 30/–க்கு ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் ஒப்பந்தக்காரர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு, அவைகள் தாருடன் கலந்து சாலைகள் அமைக்கப் பயன்படுத்தப்படுகிறது.

பசுமை பை உற்பத்தி மையம்

மல்லிகை மற்றும் பிஸ்மி சுய உதவிக் குழுக்கள் பசுமை பை உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். துணிக்கடை பைகள், மருத்துவமனை பைகள், திருமணங்கள் மற்றும் விசேஷங்களுக்குத் தரப்படும் தாம்பூல பைகள், குழந்தைகளுக்கான நாப்கின்கள், மருந்துக் கடை பைகள், பிரிட்ஜ், டி.வி., மிக்ஸி, மெத்தை, தலையணை போன்றவற்றிற்கான உறைகள் போன்ற 20க்கும் மேற்பட்ட பயன்பாடுகளுக்கு ஏற்ற வகையில் பசுமைப் பைகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

நாட்டுக் கோழி குஞ்சு பொறித்தல் மையம்

கால்நடைத்துறையில் செயல்பட்டு வரும் கோழிக் குஞ்சு வளர்ப்பு திட்டத்துடன் இணைந்து காரேந்தல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சார்பில் நாட்டுக் கோழி குஞ்சு பொறித்தல் மையம் அமைக்கப் பட்டுள்ளது. இக்கூட்டமைப்பைச் சேர்ந்த 20 உறுப்பினர் களுக்கு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம் மூலம் நாட்டுக் கோழிக் குஞ்சு பொறித்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான 30 நாள் சான்றிதழ் பயிற்சி வழங்கப்பட்டது. தற்போது இந்த மையத்தில் இரண்டு இன்குபேட்டர் கருவிகள் மூலம் மாதந்தோறும் 3000க்கும் மேல் முட்டைகளை வைத்து குஞ்சு பொறித்தல் பணியும் நடைபெற்று வருகிறது. ■

> இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 'பல்நோக்கு பயிற்சி மையம் மற்றும் உற்பத்தி மையம்' செயல்பட்டு வருகிறது.

உடலுக்கு நன்மை தரும் வெந்தயம்

நாம் அன்றாட உணவில் பயன்படுத்தும் பொருட்களில் வெந்தயம் முக்கிய பங்கு வகிக்கிறது. இது உடலில் உள்ள ரத்த ஓட்டத்தை சீராக வைத்துக் கொள்ள உதவுகின்றது. நம் உடலுக்கு தேவையான அனைத்து விதமான பயன்களும் வெந்தயத்தில் உள்ளது. வெந்தய விதைகளில் புரதம், சர்க்கரை, வைட்டமின், உலோகச் சத்து, அமினோ அமிலங்களும், வெந்தய இலைகள் மற்றும் தண்டுகளில் கால்சியம், இரும்புச் சத்து நிறைந்துள்ளன. உடலுக்கு குளிர்ச்சி அளிப்பதுடன், உடலை சமநிலையில் வைக்கவும் வெந்தயம் பயன்படுகிறது. இரவில் வெந்தயத்தை தண்ணீரில் ஊற வைத்து காலையில் எழுந்து அந்தத் தண்ணீரைக் குடித்து வந்தால், உடல் குளிர்ச்சியடைவதுடன், மலச்சிக்கலும் நீங்கும். கோடைக் காலத்தில் மோரில் வெந்தயத்தை ஊற வைத்து குடித்து வர நீரிழிவு, வயிற்றுப் புண், வாய் துர்நாற்றம் உட்பட பல நோய்கள் குணமாகும். வெந்தயக் கீரையை கூட்டு போல் சமைத்து, பகலில் சாப்பிட்டால் வாய்வு தொல்லை, வயிற்று உப்புசம் போன்றவை நீங்கும். வெந்தக் கீரையைப் பொடியாக நறுக்கி, வதக்கி இரண்டு டம்ளர் தண்ணீர் விட்டு சுண்டக் காய்ச்சி அரை டம்ளர் வீதம் இரண்டு வேளை குடித்து வந்தால் நெஞ்சுவலி குணமடையும்.

முடி கொட்டும் பிரச்சனையில் இருந்து பெண்கள் விடுபட வெந்தயம் உதவுகிறது. இரவு உறங்கச் செல்லும் முன் வெந்தயத்தை நீரில் ஊற வைத்து, காலையில் விழுதாக அரைத்து அதை தலை முடியில் தடவி அரைமணி நேரம் ஊறவைத்து குளித்தால், முடி உதிர்வது குறைவதுடன், முடி அடர்த்தியாகவும் வளரும். பொடுகுத் தொல்லை மற்றும் அரிப்பு போன்றவை குறைவதுடன், முடி பளபளப்பாகவும் மாறும். வெந்தய விழுதை பருக்கள் மீது தடவினால் பருக்கள் மறையும். ■

> “கோடைக் காலத்தில் மோரில் வெந்தயத்தை ஊற வைத்து குடித்து வர நீரிழிவு, வயிற்றுப் புண், வாய் துர்நாற்றம் உட்பட பல நோய்கள் குணமாகும்.”

டாக்டர் பி. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சுத்தமான பால் உற்பத்திக்கு...

கடந்த முறை சிறந்த கறவை மாடுகளை தேர்ந்தெடுப்பது எப்படி என்பதை பார்த்தோம். இம்முறை சுகாதார முறையில் சுத்தமான பாலினைப் பெறுவது எப்படி என்பதைப் பார்ப்போம்.

பால் கறப்பதற்கு முன் செய்ய வேண்டியது

1. பால் கறப்பதற்கு 1 மணி நேரத்திற்கு முன்பாக மாட்டின் மடிகளை கழுவி, தூய்மையான துணி கொண்டு மடிகளையும், காம்புகளையும் துடைத்து விட வேண்டும்.
2. பால் கறக்கும் பாத்திரங்களை சுத்தமான தண்ணீர் கொண்டு கழுவி, பின்னர் 200 மி.லி. கிராம் பிளீச்சிங் பவுடர் கலந்த 1 லிட்டர் தண்ணீரால் நன்கு கழுவி வெளியில் உலர்த்தி பின் பால் கறக்க பயன்படுத்த வேண்டும்.
3. பால் கறப்பவர் பால் கறப்பதற்கு முன் கைகளை சோப்பு கொண்டு நன்றாகக் கழுவி, துணி கொண்டு கைகளை துடைத்த பின்னரே பால் கறக்க வேண்டும்.
4. பால் கறக்கும் பொழுது எல்லா காம்புகளிலும் உள்ள முதல் பாலை தரையில் பீச்சி விட்டு, பின்னர் பால் பாத்திரத்தில் பால் பீச்ச வேண்டும்.
5. பால் கறந்த பின் சுத்தமான மெல்லிய உலர்ந்த துணி கொண்டு வடிகட்ட வேண்டும். இதனால் பாலில் உள்ள முடி, தூசு போன்றவைகள் நீக்கப்படும்.

பால் கறக்கும் முறைகள்

பெரிய காம்புகள் உடைய கறவை மாட்டில் கைகளில் உள்ள அனைத்து விரல்களாலும் காம்பினைப் பிடித்து உள்ளங்கையின் மீது அழுத்துவதால் பால் கறக்க முடியும். இதனால் கன்று ஊட்டுவது போன்று காம்புகளின் எல்லாப் பக்கங்களிலும் ஒரே அளவான அழுத்தத்தை ஏற்படுத்தும். சிறிய காம்புகளை உடைய கறவை மாட்டில் கட்டை விரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் இடையில் காம்புகளைப் பிடித்து சிறிது அழுத்தம் கொடுத்தும், கீழே இழுப்பதன் மூலம் பால் கறக்கலாம். ஆனால் நகத்தினால் காயம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ‘மனிதனின் முதல் உணவும், கடைசி உணவும் பால் – அதை சுகாதார முறையில் கறந்து அருந்துவதே மேல்” ■


மணியக்கா...
ஆமா ஏன் சுந்தரி இன்னைக்கு வரலா?
அட உங்களுக்கு விசயமே தெரியாதா? சுந்தரியை ஆஸ்பத்திரியில சேர்த்திருக்காங்க அக்கா?
ஆஸ்பத்திரியிலயா? சுந்தரிக்கு என்னாச்சு?
சமையல் செய்யும்போது திடீர்னு கேஸ் சிலிண்டர் வெடிச்சதுல சுந்தரிக்கு நெருப்பு காயம்பட்டிடுச்சி, அதனால ஆஸ்பத்திரியில சேர்த்திருக்காங்க. பாவம் கையில பணம் இல்லாம சுந்தரி வீட்டுல ரொம்ப சிரமப்படுறாங்க...
சமைக்கும் போது கவனச் சிதறல் இருக்கக் கூடாது
அச்சச்சோ... என்ன இப்படி சொல்லறீங்க?
என்னக்கா செய்யறது? திடீருன்னுதானே சிலிண்டர் வெடிச்சது...


நல்லவேளை காயந்தான் பட்டிருக்கு. அதுசரி காப்பீடுன்னு சொன்னீங்களே அது என்ன?
அது சரி... சுந்தரி எப்படி இருக்கா? காப்பீடு ஏதாச்சும் செஞ்சிருக்காளா?
காப்பீடுங்கறது அவ்வளவு முக்கியமானதா?
நம்ம எல்லோருக்கும் ரொம்ப உதவியா இருப்பதுதான் காப்பீடு. நீங்க கூட அவசியம் காப்பீடு செய்யணும்...
ஆமாம். நாம காப்பீடு செஞ்சா, நம்முடைய பொருளுக்கும் உயிருக்கும் எதிர்பாராம சேதம் ஏற்பட்டா இழப்பீடு கிடைக்கும்.
எதுக்கெல்லாம் காப்பீடு செய்யலாம்?
காப்பீடு செஞ்சா இவ்வளவு நல்லதா? இதுவரைக்கும் எங்களுக்கு இந்த விசயம் தெரியாம போயிடுச்சே? உடனே நாங்க எங்களுக்கும் எங்கள் பொருட்களுக்கும் காப்பீடு செய்யப்போறோம். சரியா அக்கா?
அதாவது நம்ம உயிருக்கும், நம்மளோட வீடு, வண்டி, கால்நடைகள் போன்ற சொத்துக்களுக்கும் காப்பீடு செய்யலாம்; விபத்தால நமக்கு காயம் ஏற்பட்டாலும், பொருட்கள் காணாமல் போனாலும், தீ விபத்து போன்றவற்றாலும் நமக்கு ஏற்படும் இழப்புகளுக்கும் காப்பீடு மூலம் இழப்பீடு கிடைக்கும்; இழப்பை ஈடு செய்ய அது பெரிதும் உதவுமே.
ரொம்ப சரி. உடனே போய் காப்பீடு செய்ய ஆக வேண்டியதை செய்யுங்க.
(தொடரும்)

நம் மாவட்டம்

சேலம்

குறை தீர்க்கும் நாள் கூட்டம்

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 09.07.2014 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. க. மகரபூஷணம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், முன்னோடி வங்கி மேலாளர், பல்வேறு துறைகளின் அலுவலர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். மகளிர் சுய உதவிக் குழுவினரிடம் இருந்து 58 மனுக்கள் பெறப்பட்டு, அவைகள் மேல் நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு துரித நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. ■



நாகப்பட்டினம்

முதல் தவணைத் தொகை

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரக பெருமாநாட்டு அரங்கில் 02.08.2014 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், 86 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு முதல் தவணை தொகையாக தலா ரூ. 3,50,000/– வீதம் 3,01,00,000/– ரூபாய்க்கான காசோலைகளையும், இளைஞர் திறன் பயிற்சி பெற்ற 29 நபர்களுக்கு தனியார் நிறுவனங்களின் பணி நியமன ஆணைகளையும் மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், மகளிர் திட்ட அலுவலர் (பொ) மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

திருவள்ளூர்

திட்ட விளக்க கருத்தரங்கு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூன்றாம் கட்ட திட்ட செயலாக்கம் தொடர்பான திட்ட விளக்க ஒருநாள் கருத்தரங்கு 07.08.2014 அன்று திருவள்ளூர் வட்டார அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திரு. கொ. வீரராகவராவ், இ.ஆ.ப., அவர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு சி. க. வீரணன் வரவேற்புரை நிகழ்த்தினார். இக்கருத்தரங்கில் மாவட்ட ஊராட்சி தலைவர், ஒன்றியக் குழுத் தலைவர், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார திட்ட மேலாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வழி நடத்துனர்கள் மற்றும் சமூக வல்லுநர்கள் கலந்து கொண்டனர். ■

சென்னை

கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை

சென்னை மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள், சென்னை நாகூரான் தோட்டம், பிஷப்லைன், அண்ணாநகர், கொசப்பேட்டை, சத்தியமூர்த்தி நகர் மற்றும் செம்பியம் ஆகிய நகர்ப்புற அயர் கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையும், சிறப்பாக செயல்பட்டமைக்காக ரோஜா மகளிர் குழுவிற்கு ரூ. ஒரு இலட்சமும், மனோரஞ்சிதம், மகிழும்பூ, சங்கமம், காமராஜர், குறள் மற்றும் தமிழ் ஆகிய குழுக்களுக்கு தலா ரூ. 25,000/– வீதம் காசோலைகளும், விருது மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. ■

திருச்சிராப்பள்ளி

குழுக்களின் செயல்பாடுகள் ஆய்வு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பிராம்பட்டி ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், இ.ஆ.ப., ஆகியோர் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வில் இயக்கத்தின் துவக்க நிலை செயல்பாடுகள், மக்கள் நிலை ஆய்வு, கிராம வறுமை ஒழிப்புச் சங்க செயல்பாடுகள் குறித்து உறுப்பினர்களிடம் கேட்டறிந்ததுடன், ஆவணங்களை பார்வையிட்டு, மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கியதுடன், குழுக் கூட்டம் துவங்கும் போது, வாழ்வாதார இயக்கத்தின் கோட்பாடுகளுடன் துவங்கிட அறிவுரை வழங்கினர். ■

கடலூர்

வாழ்வாதார இயக்கச் செயல்பாடுகள் ஆய்வு

கடலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்த கூடுதல் திட்ட இயக்குநர் முனைவர் ம. மனோகரசிங் அவர்கள், கடலூர் சரவணபவா கூட்டுறவு சிறப்பு அங்காடியில் வைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களைப் பார்வையிட்டார். இந்த ஆய்வின் போது மகளிர் திட்ட அலுவலர் (பொ) திருமதி காஞ்சனா, உதவித் திட்ட அலுவலர்கள், விற்பனை மேலாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

கரூர்

100% கல்வியறிவு பயிற்சி

கரூர் மாவட்டத்தில் கல்வியறிவு இல்லாத மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, கல்வியறிவு பெற்ற உறுப்பினர்களின் வாயிலாக கல்வியறிவு வழங்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்படுத்தப்படும் 100% கல்வியறிவுத் திட்டத்தின் கீழ் கல்வியறிவு வழங்கிடும் பயிற்சியினை, 23.07.2014 அன்று கரூர் வட்டாரம் காதப்பாறை ஊராட்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி. ச. ஜெயந்தி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட திட்ட இயக்குநர் திரு. செ.ம. முகம்மது சகாப்புத்தீன், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பங்கேற்றனர். ■

விழுப்புரம்

மகளிர் திட்ட அரங்கிற்கு பரிசு

தமிழ்நாடு அரசின் சார்பில் விழுப்புரம் மாவட்டம் கல்வராயன் மலையில் கோடை விழா 12.07.2014 மற்றும் 13.07.2014 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இவ்விழாவினை முன்னிட்டு அரசின் பல்வேறு துறைகளின் செயல் விளக்க அரங்குகள் கொண்ட கண்காட்சியினை, மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இக்கண்காட்சியில் விழுப்புரம் மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த நான்கு அரங்குகளில், 8 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிர் தாங்கள் தயாரித்த பொருட்களை ரூ. 1,46,500/-க்கு விற்பனை செய்தனர். மேலும் இக்கோடை விழாவில் 141 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஊக்கத் தொகைக்கான காசோலைகளையும், சிறந்த அரங்கு அமைத்ததற்கான முதல் பரிசையும் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் கூடுதல் இயக்குநர் / திட்ட அலுவலர் திரு. ஜி. இராதா, உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு துறைகளின் அலுவலர்கள், பொதுமக்கள், கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். ■

அரசக்குழி சொமிக் உற்பத்தி மையம், முத்தாண்டிக்குப்பம் சானிடரி நாப்கின் உற்பத்தி மையம், எல்.என்.புரம் பேக்கரி மையம், பூங்குணம் பால் உற்பத்தி மையம் மற்றும் கணிசப்பாக்கத்தில் செயல்படும் பிளாஸ்டிக் மறுசுழற்சி மையம் ஆகியவற்றைப் பார்வையிட்டு கூடுதல் இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்தார்.

நம் மாவட்டம்

சிவகங்கை

சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சிவகங்கை வட்டாரத்தினை சேர்ந்த லூர்து அன்னை சுய உதவிக் குழு ஆகியவை மாநில அளவிலான விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டன. மேற்கண்ட கூட்டமைப்பு மற்றும் குழுவிற்கு, விருது மற்றும் காசோலைகளை 28.07.2014 அன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது இணை இயக்குநர் / திட்ட அலுவலர் (கூ.பொ.) திரு. கோ. குருநாதன், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. அசோக்குமார் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

திண்டுக்கல்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து அவைகளுக்கு விருது மற்றும் ரொக்கப் பரிசு வழங்கப் படுகிறது. அதனடிப்படையில் திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி ஒன்றியம், டி.பஞ்சம்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினைச் சேர்ந்த ஆரோக்கிய மாதா சுய உதவிக் குழு 2010–11ஆம் ஆண்டிற்கான மாநில அளவில் சிறந்த குழுவாக தேர்ந்தெடுக்கப்பட்டு மூன்றாம் இடத்தைப் பெற்றது. அக்குழுவிற்கு 28.07.2014 அன்று கோரிக்கை தினத்தின் போது திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ரூ. ஒரு இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். ■

தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புக்கு விருது மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ்அமைக்கப்பட்டகிராமவறுமைஒழிப்புச்சங்கங்களுக்கு துவக்க நிதி ஆகியவை வழங்கும் விழா தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தாலுகா அலுவலகத்தில் 29.06.2014 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. எம். ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சண்முகநாதன் அவர்கள் கலந்து கொண்டு, 42 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு துவக்க நிதியாக தலா ரூ. 50,000/–மும், உமரிக்காடு கூட்டமைப்பிற்கு விருது மற்றும் ரூ. 1 இலட்சமும் ஊக்கத் தொகையும், மாவட்ட அளவில் சிறந்த சுய உதவிக் குழுக்களாகத் தேர்வு செய்யப்பட்ட தாழம்பூ, உமரி முத்தாரம்மன், ஸ்கேடு மல்லிகை, சக்தி, ஸ்கேடு சக்தி, ஸ்கேடு காளியம்மன் ஆகிய 6 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ. 25,000/– வீதம் நிதி உதவியும் வழங்கினார். முன்னதாக திட்ட இயக்குநர் திருமதி. ஜா. பெல்லா வரவேற்புரை ஆற்றினார். ■

ஈரோடு

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 28.07.2014 அன்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், 2010–11 மற்றும் 2011–12 ஆகிய ஆண்டுகளுக்கு மாநில அளவில் சிறந்த சுய உதவிக் குழுக்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, பொலவக்காளிபாளையம் பாரியூர் அம்மன் மகளிர் சுய உதவிக் குழு மற்றும் மைலம்பாடி ஸ்ரீ கரிய காளியம்மன் மகளிர் சுய உதவிக் குழு ஆகியவற்றிற்கும், 2011–12 ஆம் ஆண்டிற்கு சிறந்த கூட்டமைப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்புளியாம்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் விருது மற்றும் காசோலைகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர், உதவித் திட்ட அலுவலர்கள், குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

வேலூர்

நம் மாநிலத்தில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளில் சிறப்பாக செயல்படுபவைகளைத் தேர்ந்தெடுத்து, அவை களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. வேலூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படும் கூட்டமைப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சேரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு 28.07.2014 அன்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் இரா. நந்தகோபால், இ.ஆ.ப., அவர்கள் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு விருதினை வழங்கினார். ■

திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 28.07.2014 அன்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தின் போது, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தின் சிறந்த கூட்டமைப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய கும்மிடிப்பூண்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு விருது மற்றும் ரூ. 3 இலட்சத்திற்கான காசோலையையும், சிறந்த குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பூந்தமல்லி ஒன்றியத்தைச் சேர்ந்த அன்னை இந்திரா மகளிர் சுய உதவிக் குழுவிற்கு விருது மற்றும் ரூ. ஒரு இலட்சத்திற்கான காசோலையையும், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. கொ. வீரராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட திட்ட இயக்குநர் திரு. சி.க. வீரணன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

> "சிறந்த குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்னை இந்திரா மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மேலாண்மை இயக்குநரிடம் வாழ்த்து பெற்றனர்."

திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி ஒன்றியத்தைச் சேர்ந்த சித்தேரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பும், செய்யார் ஒன்றியத்தைச் சார்ந்த கழனிப்பாக்கம் சக்தி மகளிர் சுய உதவிக் குழுவும் மாநில அளவிலான விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 04.08.2014 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் சித்தேரி கூட்டமைப்பிற்கு விருது மற்றும் ரூ. 3 இலட்சத்திற்கான காசோலையையும், கழனிப்பாக்கம் சக்தி மகளிர் சுய உதவிக் குழுவிற்கு விருது மற்றும் ரூ. 1 இலட்சத்திற்கான காசோலையையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட இணை இயக்குநர் / மகளிர் திட்ட அலுவலர் (பொ) திரு. எஸ்.எஸ். தனபதி மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

கவிதை

எழுந்து வா இளைஞனே...!

வாழ்வாதார இயக்கமிது – உன்
வாழ்வை வளமாக்க வந்ததிது!
வறுமை ஒழிப்புத் திட்டமிது –
வறியோருக்கு
வற்றாத ஊற்று இது!

பயிற்சிகள் பல இதிலிருக்கு – அதை
பயின்று விட்டால் பலனிருக்கு!
பயிற்சிக்குப் பின் பணி வழங்க –
இங்கு
பல நிறுவனங்கள் காத்திருக்கு!

கரும்பு திங்கக் கூலியா? – உன்
வாழ்வில் வளம் பெற ஆசையா?
வேலையோடு பயிற்சியிருக்கு – அங்கு
படிப்பதற்கும் பணமிருக்கு!

மூன்று மாத பயிற்சிகள் முதல் – முந்
நான்கு மாத பயிற்சிகள் வரை
முனைப்போடு பயின்று விட்டால் – நீ
முன்னேறி விடலாம் வாழ்விலே!

எழுந்து வா இளைஞனே – வீர
எழுச்சி மிகு நடைபோட்டு
இயக்கத்தோடு கலந்து விடு – நீ
விரக்தியை வென்று விடு!

வி. எம். சிவகுமார்
உதவித் திட்ட அலுவலர்,
தூத்துக்குடி.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

Enabling poor rural people to overcome poverty

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் தலைவர் திரு. கனாயோ நிவான்ஸி அவர்கள் தமிழகத்துக்கு வருகை

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட வருகை தந்த பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் தலைவர் திரு. கனாயோ நிவான்ஸி அவர்கள், ஆசியா மற்றும் பசிபிக் பிரிவின் இயக்குநர் திருமதி. கிம் ஹொனே, திரு. நைஜல் பிரேட், இந்திய திட்ட இயக்குநர், திருமதி. மீரா மிஸ்ரா இந்திய நாட்டின் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கொண்ட குழு, கடந்த 05.08.2014ஆம் தேதி முதல் 08.08.2014ஆம் தேதி வரை சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, திட்ட செயல்பாடுகளைப் பார்வையிட்டனர்.

> புதியதாக அமைக்கப்பட்டுள்ள படகு கட்டும் நிலையம் மற்றும் வெளிபொருத்து மோட்டார் பழுது பார்க்கும் பணிமனை ஆகியவற்றை பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் தலைவர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

06.08.2014 அன்று பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் தலைவர் அவர்களின் தலைமையில் திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு கிராமத்திற்கு வருகை புரிந்த குழுவுக்கு, திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் பட விளக்கக் காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள படகு கட்டும் நிலையம் மற்றும் வெளிபொருத்து மோட்டார் பழுது பார்க்கும் பணிமனையினை திறந்து வைத்த பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் தலைவர் அவர்கள், குளத்துமேடு கிராமத்தில் உள்ள கல் நண்டு வளர்ப்பு குறுந்தொழில் முனைவோருடன் கலந்துரையாடியதுடன், லைட் ஹவுஸ் குப்பத்தில் உள்ள JLG பயனாளிகளுக்கு கடன் தொகை வரவு வைக்கப்பட்ட வங்கிக் கணக்குப் புத்தகங்களை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து பழவேற்காடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் நிறுவப்பட்டுள்ள MIS Tally நுண் பொருள் மற்றும் அதனைப் பயன்படுத்தும் கணினிகளின் பயன்பாடுகள் குறித்த விபரங்களைக் கூட்டமைப்பின் உறுப்பினர்களிடம் கேட்டறிந்தார்.

இறுதியாக சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் கண்காட்சி மற்றும் திட்டம் தொடங்கப்பட்டு இதுநாள் வரை செய்து முடிக்கப்பட்ட சாதனைகள் புகைப்படங்களுடன் விளக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர் திரு விக்ரம் கபூர், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர் திரு. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. கொ. வீரராகவ ராவ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

07.08.2014 அன்று திரு. கனாயோ நிவான்ஸி அவர்கள், பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் மூலம் இந்தியாவில் செயல்பட்டு வரும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து திட்ட இயக்குநர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

08.08.2014 அன்று தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., அவர்களை சந்தித்த பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் தலைவர் அவர்கள், சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் வாழ்வாதாரத் திட்டப் பணிகள் முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., தலைமையில் சிறப்பாக செயல்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது தமிழ்நாடு அரசு உள்ளாட்சித்துறை முதன்மைச் செயலாளர் திரு. நா. ச. பழனியப்பன், இ.ஆ.ப., முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

திரு. **விக்ரம் கபூர்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் /
திட்ட இயக்குநர்

திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்



பழவேற்காட்டில் புதிய படகு கட்டும் நிலையம் மற்றும் வெளிபொருத்து மோட்டார் பழுது நீக்கும் பணிமனை

> தரமான பொருட்களுடன் நியாயமான முறையில் மீன்பிடி சாதனங்களைப் பழுது பார்க்கவும் உதவிகரமாக இருக்கிறது.

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டில் வசிக்கும் மீனவர்கள் கடல் மற்றும் ஆற்றில் மீன்பிடித் தொழில் செய்திட இப்பகுதியில் 1500 FRP படகுகள் மற்றும் 2000 வெளிபொருத்து மோட்டார் படகுகள் உள்ளன. இப்பகுதியில் புதிய மோட்டார் படகுகள் கட்டுவதற்கும், மோட்டார் படகு பழுதடைந்தால் அதனை சரி செய்வதற்கும் தரமான படகு கட்டும் நிறுவனம் இல்லாததால், இப்பகுதியில் வாழ்கின்ற மீனவர்கள், தென்னிந்திய மீனவ சங்கங்களின் கூட்டமைப்பு சம்மேளனம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட மீனவ சங்கங்களின் கூட்டமைப்பினர் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் புதிய படகு கட்டும் நிலையம் மற்றும் வெளிபொருத்து மோட்டார் பழுது நீங்கும் பணிமனை கட்டி முடித்து, பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் தலைவர் திரு. திரு. கனாயோ நிவான்ஸி அவர்களால் 06.08.2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த Boat Yard மற்றும் OBM இயங்க ஆரம்பித்து இருப்பதால் இப்பகுதியில் நாள்தோறும் 3 அல்லது 4 இன்ஜின்கள் தரமான பொருள்களோடு நியாயமான கூலியில் சரி செய்து தரவும், நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 பழுதடைந்த படகுகள் சிறந்த முறையில் சர்வீஸ் செய்து தரவும், மீனவர்களுக்கு தரமான பொருட்களுடன் நியாயமான முறையில் மீன்பிடி சாதனங்களைப் பழுது பார்க்கவும் உதவிகரமாக இருக்கிறது.

வழக்கமாக இப்பகுதி மீனவர்களின் புதிய படகு கட்டுவதற்கும், படகு பழுது பார்க்கவும் 300 கி.மீ. தொலைவில் உள்ள மரக்காணத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் தற்போது இப்பகுதியிலேயே தரமான பொருட்களுடன் அவர்கள் விருப்பத்திற்கேற்ற மாடலுடன் படகுகள் தயார் செய்து கொள்ள இப்படகு குழாம் மிகவும் உதவிகரமாக இருப்பதாக அந்தப் பகுதி மீனவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். ■

துவார சிமெண்ட் கல் உற்பத்தி தொழிலகம்

காஞ்சிபுரம் மாவட்டம், வாயலூர் ஊராட்சி காரைத்திட்டு கிராமத்தில் வசித்து வரும் திருமதி. லட்சுமி, தான் நடத்தி வரும் Hollow Block தொழில் மூலம் தனது வாழ்வாதாரம் சிறப்பு அடைந்ததை வெற்றிக் கதையாக கூறுகிறார்.

'நான் எழுமலையான் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். எனது கணவரும் நானும் எங்களது ஊருக்கு அருகாமையில் உள்ள Hollow Block தொழிற்சாலையில் நான்கு வருடங்களாக கூலிக்கு பணிபுரிந்து வந்தோம். அந்தத் தொழில் மூலம் கிடைத்த கூலியைக் கொண்டு குடும்ப செலவு மற்றும் குழந்தைகளின் கல்வி செலவை சமாளிக்க முடியவில்லை. மேலும் எங்களுக்கு Hollow Block தொழில் தவிர வேறு எந்த தொழிலிலும் அனுபவம் இல்லை. இதனால் எங்களுக்கு வேறு தொழிலுக்குச் செல்ல வாய்ப்பு இல்லை.

இந்நிலையில் எங்களுக்கு சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் வட்டியில்லாத கடனாக மூன்று இலட்சம் ரூபாய் கடந்த 2012ஆம் ஆண்டு கிடைத்தது. இதனோடு குறைந்த வட்டியில் வங்கிக் கடனான ரூ. 99 ஆயிரமும்,

> குறைந்த விலையில் மூலப்பொருட்கள் வாங்கிடவும். தயார் செய்யப்பட்ட Hollow Block கற்களை விற்க சந்தை வாய்ப்பு பெற்றுக் கொடுத்தும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் எங்களுக்கு உறுதுணையாக உள்ளது

பயனாளி பங்களிப்புத் தொகையாக ரூ. 72,500/–ம் சேர்ந்து மொத்த முதலீடாக ரூ. 4,71,500/–ஐக் கொண்டு 12.12.2012ஆம் ஆண்டு 'விலிங் ஸ்டோன் Hollow Block உற்பத்தித் தொழிலகம்' என்ற பெயரில் தொழில் துவங்கினோம்.

அதனைத் தொடர்ந்து குறைந்த விலையில் மூலப்பொருட்கள் வாங்கிடவும். தயார் செய்யப்பட்ட Hollow Block கற்களை விற்க சந்தை வாய்ப்பு பெற்றுக் கொடுத்தும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் எங்களுக்கு உறுதுணையாக உள்ளது. இதுநாள் வரையில் ரூ. 26,43,512/– மதிப்பிலான Hollow Block கற்களை விற்பனை செய்து நல்ல லாபம் ஈட்டி வருகிறோம். மேலும் நாங்கள் பெற்ற கடன் தொகைக்கு கடன் திருப்புத் தொகையாக இதுநாள் வரையிலும் ரூ. 1,80,000/– திருப்பி செலுத்தப்பட்டுள்ளது. குறைவான வருவாயில் வாழ்ந்து வந்த எங்களுக்கு தொழில் துவங்க முதலீடும், விற்பனைக்கு சந்தை வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுத்து, எங்களது வாழ்வாதாரத்தை வளமாக்கிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு நன்றி. ■

சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் சிறப்புத் திட்டமாக 'மா' உற்பத்தியாளர்களுக்கான வாழ்வாதாரத் திட்டம்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் சிறப்பு திட்டமாக நாகை மாவட்டத்தில் மதுரையை தலைமை இடமாகக் கொண்டு செயல்படும் CCD நிறுவனத்தின் மூலம் கடலோர பகுதிகளில் உள்ள 'மா' விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான பணிகள் ஏப்ரல் 2012 முதல் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் அங்கமாக சிறு, குறு விவசாயிகளை கண்டறிந்து, நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு ஒன்றியத்தில் 887 'மா' விவசாயிகளைக் கொண்ட 51 குழுக்கள் வங்கிக் கணக்குடன் உருவாக்கப்பட்டு, அதனை 'திருமறைக்காடு கடலோர விவசாயிகள் கூட்டமைப்பு' என்று பதிவு செய்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பயனாளிகளைப் பற்றிய முழுமையான புள்ளி விபரங்கள், உறுப்பினர் வாரியாக 'மா' வகைகளின் உற்பத்திக்கான மதிப்பீடுகள், சந்தை ஆய்வு ஆகியவை மேற்கொள்ளப்பட்டது.

மா உற்பத்திக்கான இயற்கை வேளாண் தொழில் நுட்ப பயிற்சி மற்றும் களப்பட்டறிவுப் பயணமாக, சிறப்பாக செயல்படுத்தக் கூடிய 'மா' விவசாயப் பகுதிகளுக்கும் மற்றும் 'மா' கூழ் தொழிற்சாலைக்கும் அழைத்துச் செல்லப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் சுழல் நிதியாக ஒவ்வொரு குழுவிற்கும் ரூ. 20,000/– வீதம் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டது. குழு உறுப்பினர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு 4 கொள்முதல் நிலையங்கள் துவங்கப்பட்டு அருகாமையில் உள்ள நிலையங்களில் விற்பனை செய்து பயனடைந்து வருகின்றனர். இதன் மூலம் இரண்டு பருவத்தில் 814.754 டன் மாங்காய் 68,20,475 ரூபாய்க்கு கொள்முதல் செய்து, 72,05,692 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கொள்முதல் உதவியாளர்களுக்கு ரூ. 3,85,217/– இலாபமாகவும், உற்பத்தியாளர்களுக்கு 10 முதல் 15% கூடுதல் தொகையாக கிடைத்துள்ளது.

> “வாழ்வாதாரத் திட்டத்திற்கு முன்பு பெரும்பாலான விவசாயிகள் தங்களது மா மரங்களை குத்தகைக்கு விட்டிருந்தார்கள். இத்திட்டத்தின் மூலம் பெரும்பாலான விவசாயிகள் குத்தகையில் இருந்து மீண்டு சொந்தமாக மா மரங்களைப் பராமரித்து வருகிறார்கள். இதன் மூலமாகவும் விவசாயிகளுக்கு கூடுதலாக வருமானம் கிடைத்துள்ளது.”

இத்திட்டத்தினால் 'மா' உற்பத்தியாளர்கள் கீழ்க் கண்டவாறு பயனடைந்துள்ளார்கள்.

1. இயற்கை வேளாண் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தியதால் முன்பை விட 10% மகசூல் அதிகரித்துள்ளது.
2. இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்தியதால் 10% உற்பத்தி செலவு குறைந்துள்ளது.
3. கொள்முதல் நிலையத்தின் மூலம் விற்பனை செய்ததால் 10% கூடுதல் விலை கிடைத்துள்ளது. திட்டத்திற்கு முன்பு பெரும்பாலான விவசாயிகள் தங்களது மா மரங்களை குத்தகைக்கு விட்டிருந்தார்கள். இத்திட்டத் தின் மூலம் பெரும்பாலான விவசாயிகள் குத்தகையில் இருந்து மீண்டு சொந்தமாக மா மரங்களைப் பராமரித்து வருகிறார்கள்.
4. இதன் மூலமாகவும் விவசாயிகளுக்கு கூடுதலாக வருமானம் கிடைத்துள்ளது.

இத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து மேலும் ஐந்து கிராமப் பஞ்சாயத்துகளுக்கு விரிவுபடுத்தப்பட உள்ளது. ■

வாழ்க்கை மேம்படஇளைஞர்களுக்கான
தொழிற்திறன் பயிற்சி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள முதலியார் குப்பம் பகுதியில் அமைந்துள்ளது செராக் சமுதாய கல்லூரி. இக்கல்லூரியில் ஓராண்டு கால நர்சிங் உதவியாளர் பயிற்சி அளிக்க சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து, திட்டப் பகுதியில் உள்ள தகுதி வாய்ந்த ஏழை மாணவிகள் 35 பேர் தேர்வு செய்யப்பட்டு, 05.07.2013 முதல் பயிற்சி துவக்கப்பட்டு, இப்பயிற்சி திறமை வாய்ந்த விரிவுரையாளர்கள் மூலம் நடத்தப்பட்டது. மாணவிகளுக்கு மாதந்தோறும் அவர்களின் இருப்பிடத்திலிருந்து பயிற்சி நிலையத்திற்கு சென்று வர பேருந்து கட்டணமாக ஒவ்வொரு மாணவிக்கும் ரூ. 1000/– வீதம் அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது.

பயிற்சியின் போது செங்கல்பட்டில் உள்ள மருத்துவ மனைகளில் செய்முறை பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சியானது 05.07.2014ல் நிறைவு பெற்றது. மேற்படி பயிற்சிக்கான தேர்வு சென்னை திறந்தநிலை பல்கலைக் கழகம் மூலம் சென்னையில் நடத்தப்பட்டது. தேர்வில் வெற்றி பெற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் வரப் பெற்றதும் வேலை வாய்ப்புப் பெற்றுத் தரும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

பயிற்சி பெற்ற மாணவர்கள் கூறுகையில்,

'பயிற்சியினை மேற்கொண்ட ஏழை குடும்பத்தைச் சேர்ந்த பயிற்சியாளர்கள் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்ட நர்சிங் உதவியாளர் பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருந்தது. பயிற்சியாளர்களாகிய நாங்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் வேலைக்குச் சேர்ந்து, மாத ஊதியம் பெற்று எங்களின் குடும்ப வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வழிவகுத்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்திற்கு எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்' என்று தெரிவித்தார்கள். ■

> மாணவிகளுக்கு மாதந்தோறும் அவர்களின் இருப்பிடத்தில் இருந்து பயிற்சி நிலையத்திற்கு சென்று வர பேருந்து கட்டணமாக ஒவ்வொரு மாணவிக்கும் ரூ. 1000/– வீதம் அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது. செங்கல்பட்டில் உள்ள மருத்துவ மனைகளில் செய்முறை பயிற்சி அளிக்கப்பட்டது.

■ இரண்டு படங்களுக்கும் உள்ள ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடிக்கவும்





■ ஆப்பிளை அடைய....



■ எத்தனை சதுரங்கள் உள்ளன?



■ புள்ளிகளை இணைக்கவும்



உங்க ஏரியா...

■ செய்து பாருங்கள்

> தரம் பிரித்தலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, எவ்வாறு ஊராட்சிகளில் சென்று தரம் பிரித்தல் செய்யப்பட வேண்டும் என்பது குறித்து அறிவுரைகளைத் திட்ட இயக்குநர் அவர்கள் வழங்கினார்.

சமூக அமைப்புகளுக்குத் தரம் பிரித்தல் பயிற்சி

புதுவாழ்வு திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஒத்த தொழில் குழுக்கள் ஆகியவற்றிற்குத் தரம் பிரித்தல் குறித்த பயிற்சி அனைத்து உதவித் திட்ட மேலாளர்களுக்கும் 05.08.2014 மற்றும் 06.08.2014 ஆகிய இரண்டு நாட்கள் DMI பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியினை மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து, சமூக அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்தும், தரம் பிரித்தலையும், அதன் முக்கியத்தையும் எடுத்துரைத்து, எவ்வாறு ஊராட்சிகளில் சென்று தரம் பிரித்தல் செய்யப்பட வேண்டும் என்பது குறித்து அறிவுரைகளை வழங்கினார். இப்பயிற்சியில் கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. ஆர்.வி.ஷஜீவனா, மாநில வல்லுநர்கள் திரு. கே.கருப்பசாமி, திருமதி. லலிதா மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட திட்ட மேலாளர் திரு. பி.தனசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

மாநில அளவில் முதலிடம்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராக உள்ளவர்களை 100 சதவீத எழுத்தறிவு பெற்றவர்களாக உருவாக்கும் கூட்டமைப்புகளுக்கு ரூ. 50,000/– ஊக்கத் தொகை வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதன்படி மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட 12 கூட்டமைப்புகளில் கிருஷ்ணகிரி மாவட்டம் புதுவாழ்வு திட்டத்தை சேர்ந்த அத்திப்பட்டி, கருமாண்டபதி, மேட்டுத்தாங்கல், கே. பாப்பாரப்பட்டி, கெரிகேப்பள்ளி ஆகிய ஐந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் 100 விழுக்காடு கல்வியறிவு விருது பெற்று, மாநில அளவில் கிருஷ்ணகிரி மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது. 11.08.2014 அன்று கிருஷ்ணகிரி

மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தின் போது மாவட்ட ஆட்சியர் திரு. டி.பி.இராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு ரூ.50,000/–த்திற்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பாலசுப்பிரமணியம், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
புது வாழ்வு திட்டம்

திருவண்ணாமலை

மாற்றுத் திறனாளிகளுக்கு பரிசு

சென்னையில் 19.07.2014 அன்று நடைபெற்ற மாநில அளவிலான மாற்றுத் திறனாளிகளுக்கான நீச்சல் போட்டியில் திருவண்ணாமலை மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் ஒன்றியங்களைச் சேர்ந்த திரு. பழனி, திரு. சௌந்தர்ராஜன் மற்றும் திரு. விஜயன் ஆகியோர் கலந்து கொண்டு பதக்கங்களை வென்றனர். இவர்களின் சாதனையைப் பாராட்டி, 24.07.2014 அன்று திருவண்ணாமலை ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திரு. அ. ஞானசேகரன், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சி. செவத்தான், அனைத்துத் துறை அலுவலர்கள், உதவித் திட்ட மேலாளர்கள், புதுவாழ்வுத் திட்ட பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். ■

“சென்னையில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான நீச்சல் போட்டியில் திருவண்ணாமலை மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் ஒன்றியங்களைச் சேர்ந்த திரு. பழனி மூன்று பிரிவுகளில் முதல் பரிசும், திரு. சௌந்தர்ராஜன் இரண்டு பிரிவுகளில் இரண்டாம் பரிசும் மற்றும் திரு. விஜயன் ஒரு பிரிவில் மூன்றாம் பரிசும் வென்றுள்ளனர்.”

காஞ்சிபுரம்

கைத்தொழிலைக் கற்றுக் கொள்ள வாங்க!

காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்டம் சார்பில் தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு JCB பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியினை மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர் அவர்கள் துவக்கி வைத்தார். 04.07.2014 அன்று JCB பயிற்சியினை ஆய்வு செய்த, நுண்நிதி வல்லுநர் திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்கள் பயிற்சி பெற்று வரும் இளைஞர்களை ஊக்கப்படுத்தி வேலை வாய்ப்பு பெற வாழ்த்தினார். ■

விருதுநகர்

100% எழுத்தறிவு விருது

விருதுநகர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் நான்கு ஒன்றியங்களில் 165 ஊராட்சிகளில் செயல்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் செயல்படும் அயன்கரிசல் குளம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, அம்மாப்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிற்கு 100% எழுத்தறிவு விருதையும், படந்தால் மலர்கள் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு சிறந்த குழுவிற்கான மணிமேகலை விருதையும், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்கள். ■

கோவை

அசோலா வளர்ப்பு செயல்முறை விளக்கம்

கோவை மாவட்ட புதுவாழ்வு திட்டப் பகுதியான திருப்பூர் மாவட்டம், பெரியபட்டி ஊராட்சியின் ‘தென்றல் பசு மாடு வளர்ப்போர் புச்சரத்தை’ சேர்ந்த இலக்கு மக்களுக்கு அசோலா வளர்ப்பு முறை 18.07.2014 அன்று பெரியப்பட்டி வறுமை ஒழிப்புச் சங்க அலுவலகத்தில் செயல் விளக்கம் மூலம் நேரடியாக செய்து காட்டி விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த செயல் விளக்க நிகழ்ச்சியில் கோவை மாவட்ட புதுவாழ்வு திட்ட பால் வள ஆலோசகர், உதவித் திட்ட மேலாளர் (சந்தைப்படுத்துதல்) கால்நடை பராமரிப்புத் துறை பெரியப்பட்டி கால்நடை மருந்தகக் கால்நடை உதவி மருத்துவர், ஊராட்சி மன்றத் தலைவர், பெரியபட்டி, குடிமங்கலம், ஆனைமலை முதலிய களப்பகுதி பணியாளர்கள், அனைத்து வாழ்வாதார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் புச்சரத்தின் இலக்கு மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

> புதுக்கோட்டை மாவட்ட புதுவாழ்வு திட்டம் சார்பில் 42 மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டு 31 தங்கம், 16 வெள்ளி மற்றும் 13 வெண்கலப் பதக்கங்களை வென்றதுடன் மாநிலத்திலேயே இரண்டாமிடம் பெற்றதுடன், தனித்திறன் சாதனையாளர் கேடயத்தினையும் வென்றுள்ளனர்.

புதுக்கோட்டை

சாதனை படைத்த மாற்றுத் திறனாளிகள்

சென்னையில் நடைபெற்ற மாநில அளவிலான மாற்றுத் திறனாளிகளின் நீச்சல் போட்டியில் புதுக்கோட்டை மாவட்ட புதுவாழ்வு திட்டம் சார்பில் கலந்து கொண்ட மாற்றுத் திறனாளிகள் 60 பதக்கங்களை வென்றுள்ளனர். 25.07.2014 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மேற்படி சாதனையாளர்களையும், அவர்களுக்கு பயிற்சி அளித்த பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டுக் கழக மேலாளர் திரு. வாஞ்சிநாதன் ஆகியோரை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பாராட்டியதுடன், மாற்றுத் திறனாளிகளுக்காக இனி நடைபெறும் போட்டிகளில் புதுக்கோட்டை மாவட்டத்தின் சார்பில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கு அனைத்து உதவிகளும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் செய்யப்படும் என்றும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. எஸ். வசுமதி, புதுவாழ்வு திட்ட மாநிலச் சுற்றுச்சூழல் வல்லுனர் திரு. பாண்டியராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

தேனி

வங்கிப் பெருங்கடன்

தேனி மாவட்ட புதுவாழ்வு திட்டம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பெருங்கடன் உதவி வழங்கும் விழா தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 04.08.2014 அன்று நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சியர் திரு. கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, தேனி மாவட்டம் அம்பாசமுத்திரம், ஜங்கால்பட்டி, தாடிச்சேரி, ஸ்ரீரெங்கபுரம், துரைசாமிபுரம், கடமலைக்குண்டு ஆகிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 1 கோடியே ஒரு இலட்சத்து 57 ஆயிரம் மதிப்பில் வங்கிக் கடன் உதவியினை வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு கழுகாசலமூர்த்தி, உதவித் திட்ட மேலாளர்கள், புதுவாழ்வு திட்டப் பணியாளர்கள், பொதுமக்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

மகளிரின் முகவரியாய் முற்றம்...!

முற்றம் இதழ் சந்தா விவரம்

ஒரு ஆண்டு சந்தா	– ரூ. 100/–
இரண்டு ஆண்டு சந்தா	– ரூ. 150/–
மூன்று ஆண்டு சந்தா	– ரூ. 250/–
நான்கு ஆண்டு சந்தா	– ரூ. 300/–
ஆயுள் சந்தா	– ரூ. 600/–
புரவலர் கட்டணம்	– ரூ. 15,000/–

சந்தாத் தொகையை ‘முற்றம்’ என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தக்க முறையில் வங்கி வரைவோலையாக மட்டுமே அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையுடன், சந்தாதாரரின் பெயர், க/பெ. (அ) த/பெ., குழுவின் பெயர், வீட்டு எண், தெரு எண், கிராமத்தின் பெயர், தாலுக்கா பெயர், மாவட்டத்தின் பெயர் ஆகியவற்றுடன் அஞ்சல் குறியீட்டு எண்ணையும் (பின்கோடு எண்) தவறாமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். முற்றம் சந்தாக்களுக்குரிய புத்தகம் அந்தந்த நபருக்கு அனுப்ப வேண்டுமா? அல்லது மொத்தமாக எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதை தெளிவாகக் கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.

மதிப்பூட்டிய பால் பொருட்கள்

நமது நாடு 121 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்து உலகளவில் முதலிடம் வகிக்கிறது. இதில் 5 சதவீதம் தான் மதிப்பூட்டிய பால் பொருட்களாக உற்பத்தி செய்யப்படுகிறது. பாலினை ஐஸ்கிரீம், பனீர், கோவா, நெய் போன்ற பொருட்களாக உற்பத்தி செய்யப்படும் போது, பன்மடங்கு இலாபம் பெற வாய்ப்புள்ளது. இத்தகைய மதிப்பூட்டிய பால் பொருட்கள் உற்பத்தி செய்வது பற்றி பால் உற்பத்தியாளர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

ஐஸ்கிரீம்

குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் விரும்பி உண்பது ஐஸ்கிரீம். குறிப்பாக கோடைக்காலத்தில் அதிக பாலினை ஐஸ்கிரீமாக தயாரிக்கும்போது. பாலின் விலையை விட ஐந்து மடங்கு விலை கிடைக்கிறது.

பனீர்

5 லிட்டர் எருமைப் பாலுக்கு 1 கிலோ பனீர் கிடைக்கிறது. ஆட்டு மாமிசத்தில் உள்ள அளவிற்கு சத்துக்கள் பனீரில் உள்ளது. இதனை செய்வது மிகவும் எளிது. பாலில் சிட்ரிக் அமிலம் கலந்து, ஒரு தூய வெள்ளை துணியில் இறுக்கும் போது பனீர் கிடைக்கிறது.

கேரட் பால்

ஒரு லிட்டர் பாலுக்கு 50 மி.லி. கேரட் சாறும், 1100 கிராம் சர்க்கரையும், 1 கிராம் ஏலக்காயும் (5 எண்ணிக்கையில்) சேர்த்து மிக்ஸியில் அரைத்து சேர்க்கப்படும் போது, கேரட் பால் தயாராகிறது. இதில் உயிர்சத்து ஏ அதிகம் உள்ளது. குழந்தைகளுக்கு மிகவும் சீரிய சத்துடையது.

பீட்ரூட் பால்

கேரட் பாலைப் போலதான் பீட்ரூட் பாலும் தயாரிக்கப்படுகிறது. கேரட்டுக்குப் பதிலாக பீட்ரூட் பயன்படுத்தப்படுகிறது. ஒரு லிட்டர் பாலுக்கு 20 மி.லி. பீட்ரூட் சாறு போதுமானதாகும்.

கோவா

5 லிட்டர் பாலுக்கு 1 கிலோ கோவா கிடைக்கிறது. இதனை சர்க்கரை சேர்த்தும், சர்க்கரை இல்லாமலும் தயார் செய்யலாம். இவ்வாறு தயாரிக்கப்பட்ட கோவாவிலிருந்து குலோப்ஜாமூன், பேடா போன்ற இனிப்பு பொருட்கள் தயாரிக்கலாம்.

இவ்வகையான மதிப்பூட்டிய பொருட்களை தயார் செய்யும் போது அவற்றில் பாலினை விட அதிக சத்தும் சுவையும் மிகுந்து காணப்படுகிறது. குழந்தைகள், முதியோர் மற்றும் பெண்களுக்கு சுண்ணாம்புச் சத்தும், வைட்டமின் சத்தும் கிடைக்க வாய்ப்புள்ளது. ■

மேலும் விபரங்களுக்கு :
உணவு மற்றும் பால் வள தொழில் நுட்ப கல்லூரி,
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல்
பல்கலைக் கழகம்,
கோடுவேலி, அலமாதி (அஞ்சல்),
சென்னை – 600 052.

முனைவர் வெ. புருஷோத்தமன்
வணிக மேம்பாடு மற்றும் கூட்டாண்மை வல்லுநர் – II
புதுவாழ்வு திட்டம்

மாற்றம் தந்த புதுவாழ்வு

தருமபுரி மாவட்டம், வேப்பலை அள்ளி கிராமத்தில் வசித்து வருபவர்கள் முருகன் – காளியம்மாள் தம்பதியினர். இருவரும் பிறவியிலேயே கைகால் செயல் இழந்த மாற்றுத் திறனாளிகள் என்பதால், இவர்களால் எந்த வேலையும் செய்ய இயலாது. இந்த சமயத்தில் வேப்பலை அள்ளி ஊராட்சியில் புதுவாழ்வு திட்டம் துவக்கப்பட்டு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் செயல்படத் துவங்கியது.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்த காளியம்மாள், ஆடு வாங்க விண்ணப்பித்தார். அவரின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு தனி நபர் கடனாக ரூ. 12 ஆயிரம் வழங்கப்பட்டது. அந்தத் தொகையைக் கொண்டு, இரண்டு ஆடுகள் வாங்கிய காளியம்மாள் அதை வளர்த்து வருகிறார். தற்போது காளியம்மாளிடம் மூன்று ஆடுகள் உள்ளன. ஆடுகளை வளர்ப்பதன் மூலம் வருவாய் பெறும் காளியம்மாள், கடன் கொடுத்த புதுவாழ்வு திட்டத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறார். ■

– ஜி. லட்சுமி, சமூக பத்திரிகையாளர்

வறுமை ஒழிப்புச் சங்கத்தில் உறுப்பினராக இணைந்த காளியம்மாள், ஆடு வாங்க விண்ணப்பித்தார். அவரின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு தனி நபர் கடனாக ரூ. 12 ஆயிரம் வழங்கப்பட்டது. அந்தத் தொகையைக் கொண்டு, இரண்டு ஆடுகள் வாங்கி வளர்த்து வருகிறார்.

வாழ்வில் வளம் சேர்த்த புதுவாழ்வு திட்டம்

பெற்றோருக்கு பாரமாக இருந்த ஜோதி தீர்த்தம் தற்போது நாள் ஒன்றுக்கு ரூ. 1500/– வரை வருவாய் பெற்று. பெற்றோரை வாழ வைக்கும் சுமைதாங்கியாக உள்ளார். தன் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றிய புதுவாழ்வுத் திட்டத்திற்கு நன்றி என்கிறார் ஜோதி தீர்த்தம்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், கல்லூரணி ஊராட்சியில் வசிக்கும் ஜோதி தீர்த்தம், பிறவியிலேயே இரண்டு கால்களும் செயல் இழந்த மாற்றுத்திறனாளி என்பதால், தன்னுடைய அன்றாடத் தேவைகளுக்குக் கூட மற்றவர்களை சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தார். அச்சமயத்தில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் ஜோதி தீர்த்தத்திற்கு ரூ. 6000/– கடன் வழங்கப்பட்டு, அந்தத் தொகையினை மூலதனமாகக் கொண்டு, சிறிய பெட்டிக் கடை ஒன்றை வைத்தார். மேலும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் முயற்சியாலும் மற்றும் புதுவாழ்வு திட்டமும் வங்கிக் கடனாக ரூ. 1,80,000/ வாங்கிக் கொடுக்கப்பட்டது. தற்போது கடையை விரிவாக்கச் செய்து பெரிய அளவில் நடத்தி வருகிறார். நாள் ஒன்றுக்கு ரூ. 1500/– வரை விற்பனை ஆகிறது. பெற்றோருக்கு பாரமாக இருந்த ஜோதி தீர்த்தம் தற்போது பெற்றோரை வாழ வைக்கும் சுமைதாங்கியாக உள்ளார். தன் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றிய புதுவாழ்வுத் திட்டத்திற்கு நன்றி என்கிறார் ஜோதி தீர்த்தம். ■

–சகாயசெல்வி, சமூக பத்திரிகையாளர்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பெண்களும் எரிசக்தி சேமிப்பும்

எரிசக்தி கிடைக்கும் தன்மையில் ஏற்பட்ட மாற்றங்களும், கொள்கை தலையீடுகளாலும், ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகிறது. ஆகையால் எரிசக்தி கொள்கைகளைத் தீட்டும் போது பாலினம் தொடர்பான தேவைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். பின்வரும் பிரிவு பாலினம் தொடர்பான எரிசக்தி சீர்திருத்தம் பற்றி விளக்கும்.

பாலின முக்கியத்துவம் பெற்ற எரிசக்தி முறைகள்

ராஜீவ்காந்தி கிராம சமையல் எரிவாயு விநியோகம்

இத்திட்டத்தின் நோக்கமானது சிறிய அளவில் எரிவாயு கல முகமை நிறுவனம் அமைத்து, அதன் மூலம் ஊரகப் பகுதிகளில் தொலைதூர கிராமங்களிலும், எரிவாயு கிடைக்க வாய்ப்பில்லா கிராமங்களிலும் மாதம் 600 கலங்கள் வீதம் விற்பனை செய்வது. இத்திட்டத்தின் கீழ் கணவன் மனைவி இருவரின் கூட்டுக் கணக்கில் தான் எரிவாயு கலன் விநியோகம் செய்யப்படும். ஒருவேளை பயனாளி தனி நபராக இருப்பின், திருமணத்திற்குப் பின் வாழ்க்கைத் துணைவரின் பெயர் தாமாகவே ஒருங்கிணைக்கப்படும். இது ஊரகப் பெண்கள் மேம்பாட்டிற்கு ஒரு படிக்கட்டாக அமையும்.

தேசிய உயிரி சமையல் அடுப்புத் திட்டம்

சுகாதாரம், காலநிலை மாற்றம், எரிசக்தி பாதுகாப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் 'சமையல் அடுப்பு' என்ற சிறப்பு புதிய திட்டத்தை 2009–10ஆம் ஆண்டு ஆரம்பித்தது. உயிரி சமையல் அடுப்பானது சமுதாயத்தின் பலவீனமான மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களின் சுகாதாரம் மற்றும் நலம் தொடர்பான பிரச்சனைகளை நேரடியாக தீர்க்கும் திறன் கொண்டது. இந்த அடுப்பில் உள்ள மாசில்லா எரியும் திறன் காற்று மாசு பாட்டை வெகுவாகக் குறைக்கிறது.

இத்திட்டத்தின் முன்னோட்டமாக, எளிதில் எடுத்துச் செல்லக் கூடிய 15,000 கையடக்க அடுப்புகள் 2010–11ஆம் ஆண்டு சோதனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு. அவற்றில் 9000 அடுப்புகள் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

மூன்று நிறுவனங்கள் மூலம் வெவ்வேறு மாநிலங்களில் இத்திட்டங்கள் செயல் படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான நிதியுதவி உயிரி சமையல் அடுப்புகளுக்கு 50% வரை அளிக்கப்படுகிறது. அதிகபட்சம் 300 ரூபாய் வரை இயல்பான வரைவு அடுப்புகளுக்கும், ரூபாய் 700 வரை விசை அடுப்புகளுக்கும் அளிக்கப்படுகிறது.

இந்த முன்னோட்ட நடவடிக்கைகள் அனுபவம் வாய்ந்த தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் தொழில் முனைவோர் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இவை எரிசக்தி துறை சார்ந்த திட்டங்களை நடைமுறைப்படுத்த அடிமட்ட அளவில் போதிய அனுபவம் வாய்ந்த அமைப்புகளாகும்.

சூரிய அடுப்புகளுக்கான மத்திய அரசின் நிதி உதவி

ஜவஹர்லால் நேரு தேசிய சூரிய சக்தி திட்டத்தின் (JNNSM) பரவலாக்கப்பட்ட சூரிய பயன்பாட்டு திட்டத்தின் கீழ், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை சூரிய அடுப்புகளுக்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறது.

மத்திய அரசு நிதி உதவியாக ரூபாய் 3600 ஒரு சதுர அடிக்கு நேரடி வெப்ப சேகரிப்பு பயன்பாடுகளுக்காகவும், ரூபாய் 2100 ஒரு சதுர அடி கைமுறை (மனித ஆற்றல்) செரிவுப் பயன்பாடுகளுக்கும் அளிக்கப்படுகிறது. ஊரகப் பகுதிகள் உட்பட நாடு முழுவதும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (70,700 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

திறந்தவெளியில் மலம் கழிப்பதால், மற்றவர்களின் கேலி கிண்டலுக்கு ஆளாவது மட்டுமல்ல. கேடு விளைவிக்கும் நோய்கள் நம்மையும், மற்றவர்களையும் தாக்கும் அபாயமும் ஏற்படுகிறது. கழிவறையில் மலம் கழிப்பதால், இவை அனைத்தையும் தடுக்க முடியும். எனவே, இனி மலம் கழிக்க கழிவறையை பயன்படுத்துங்கள். திறந்தவெளியில் மலம் கழிப்பவர்களைப் பார்த்தால், சீச்சீ என சொல்லுங்கள்.

கழிவறை உபயோகமே, வாழ்க்கைக்கு ஆரோக்கியம்.

unicef
unite for children

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH(C)/455/12-14 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2012 - 14
Date of Publication 21.08.2014

அனைவருக்கும் வங்கிச் சேவை

- வங்கிச் சேவை சென்றடையாத பகுதிகளில் வங்கி வணிகத் தொடர்பாளர் மற்றும் நடமாடும் வங்கி வாயிலாக வங்கிச் சேவை பெறும் வசதி
- வங்கிச் சேவை மையங்கள் மற்றும் கைரேகை மூலம் பணம் பட்டுவாடா செய்யும் தானியங்கி இயந்திரங்கள்
- ஆதார் இணைப்புடன் செயல்படுத்தப்படும் நேரடி பலன் பெறும் வசதிகள்
- நிதி பற்றிய கல்வியறிவு மற்றும் கடன் ஆலோசனை மையங்கள்

மேலும் விவரங்களுக்கு: அருகில் உள்ள இந்தியன் வங்கி கிளையை தொடர்பு கொள்ளவும்.

கார்பரேட் அலுவலகம்:
254-260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
மின்னஞ்சல்: indmail@indianbank.co.in
கட்டணமில்லா தொலைபேசி: 1800 425 00 000
இணையதளம்: www.indianbank.in

इंडियन बैंक
இந்தியன் வங்கி
உங்கள் தொழில்நுட்பநேய வங்கி